padippakam

நிகழ்

கடிதம் - வண்ணநிலவன்

தேவதாசிகளும் ஹரிஜனங்களும் - பிரேமிள்

பன்முக இசையின் போர்வாள் - ஹான்ஸ் ஐஸ்லர்

சுய சித்திரத்திற்கான குறிப்புகள் - காம்யூ

சைக்கிள் - சி. எம் முத்து

இளையராஜா - அ. காதர்

நூல் விமர்சனம், கவிதைகள்



படிப்பகம்

padippakam

கொண்டிருந்த பெண்ணை பார்த்தேன். நம் பகவதியும், சந்திராவும் ...வும்,.. வும் டால்ஸ்டாயின் அன்னா கரீனாவும் தான் அவள்''. எந்த நதியும் கால்களை நனைப்பதற்குக்கூடப் போதுமானதாக இல்லை இந்த நாட்களில். அவமானத்தைத் தருகிற மர்ம உணர்வுகளோடு உலகம் இயங்குகிறது. திரைப்படங்களுக்கு போதுமான பரிசுகளைக் கொடுத்தாயிற்று. ஒரு இருநூற்றைம்பது பேர்கள் போல மிகுந்த அழுத்தத்தோடு, விட்டுகொடுக்க மனமற்றவர்களாய் விமர்சன பூர்வமாக, பிரக்ஞையுணர்வுடன் இலக்கியம் பற்றித் தெரிந்துகொண்டு படைத்துக் காட்டியிருக்கிறதும் நிகழ்ந்துவிட்டது (சிவராம கராந்துக்குத் தரப்பட்ட பத்மஸ்ரீ பட்டத்தை அவர் மறுத்து,ராஷ்டிரபதிக்கு எழுதிய கடிதமும் நம்மோடுதான் இருந்து கொண்டிருக்கிறது) கணேசனின் உலகம் துரதிஷ்டவசமானதும், மணி, (அவர் உண்மையில் ஞானத்தை அடைந்தவர் என்றாலும்) நான் என்னுடைய கடமைகளை அவசியம் செய்வது என்றே திடங்கொண்டிருக்கிறேன். உங்கள் எல்லோருடைய உதவிகளும் இதைச் சிறக்கப் பண்ணும். உண்மையை அறிந்த யோகியாகஇருந்து காரியங்களை முடிப்போம். மனித சுதந்திரம், அமைதி இவைகளுக்கு நாமும் ஏதாவது செய்தாக வேண்டும் ; இலக்கியம் சிருஷ்டிக்கிறவர்கள் என்கிற விதமாய்.

உங்கள்
வண்ணநிலவன்

படிப்பகம்

padippakam

கடிதம் II

வண்ணநிலவன்

அன்புள்ள நம்பிக்கு,

இன்று நீங்கள் அனுப்பிய வல்லிக்கண்ணன் கடிதங்கள் வந்து சேர்ந்தன. அந்த கடிதங்களை எல்லாம் படித்தபோது எவ்வளவு ரம்யமான காலத்தையெல்லாம் இழந்துவிட்டு வந்துவிட்டோம் என்று ஏக்கமாக இருக்கிறது எவ்வளவு மனோகரமான நாட்கள் அவை. நினைக்க நினைக்க எவ்வளவோ ஞாபகத்துக்கு வருகிறது. பதேர் பாஞ்சாலியின் உருக்கம் நிறைந்த அழகை அந்த நாட்கள் நினைவு படுத்துகின்றன எளிமையும் கவித்துவமும்மிக்க காலமது. பொலிவிழந்த போர்வை, ஜமீலா, அபிதா மோகமுள், அம்மா வந்தாள், அன்பு வழி தாகூரின் கதைகளைலெல்லாம் படிக்கும்போது கடைசி இருபது முப்பது பக்கங்கள் வரும்போது, இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த உருக்கம் நிறைந்த அனுபவம் முடியப் போகிறதே என்று ஏக்கமாக இருக்கும். முடிந்துவிடக்கூடாது என்பதற்காகவே பல நாவல்களை கடைசிவரும்போது அப்படியே வைத்துவிடுவேன். அதுபோல முடியவே கூடாத நாட்கள் அவை. முடிந்துவிட்டன. உயிர்ப்பும் ஜீவனுமிக்க காலமது எல்லாமே பொய்யாய் கனவாய் பழங்கதையாய் முடிந்துவிட்டது.

அப்போது எவ்வளவோ கஷ்டம் இருந்தது. என்றாலும், ஜங்ஷன் ரயில்வே கேட்டைத் தாண்டிப் போகும் போதெல்லாம் சுல்தானியா ஹோட்டல் டீக்காக முப்பது பைசாவைப் பத்திரப் படுத்த முடிந்தது. ராயல் டாக்கீஸில் ஆராதனா பார்க்கிறதுக்காக செகண்ட் ஷோ போக முடிந்தது. மணிமொழி என்ற அருமையான நண்பரோடு வந்து நெல்லை லாட்ஜில் தங்கியிருந்த கங்கை கொண்டானை ஒன்பது மணிக்குமேல் கோபால் கல்யாணியோடு பார்க்க முடிந்தது. அம்பாசமுத்திரம் கோர்ட்டுக்குப் போனபோதெல்லாம் பாலனைப் பார்க்கப் போவதுண்டு.

சோகத்தின் அழகைச் சொல்லத் தெரிந்தவனே கலைஞனாக முடியும் கண்ணதாசனிடம் இது இருந்தது. சினிமாவில் ரேயிடம் இது இருந்தது கதைகளில் தாகூரிடம் இது இருந்தது.

இந்த கடிதங்களைப் படித்ததும் யார் யாரையெல்லாமோ மனம் தேடிற்று. ரங்கநாதன் இல்லாமல் நாமும் வாழ்ந்து கொண்டிருக்

படிப்பகம்

padippakam

கிறோமே என்று உறுத்திற்று. நடையும் அஃக்-கும் இல்லாமல் போய்விட்டது. கண்ணதாசனின் 'கடிதம்' இல்லை, பூதப்பாண்டியில் கிருஷ்ணன் நம்பி இல்லை. 3. சொக்கலிங்கசாமி கோயில் தெரு வில் - இல்லை. விஸ்வநாதன் - ராமமூர்த்தியின் கச்சேரியை பொருட் காட்சியில் கேட்க முடியவில்லை. ஒரு முறை வ. க. விடம் பேசிக் கொண்டிருந்தபோது செப்பறைத் தேர் எல்லாம் போய்விட்டது என்றார்கள் தாமிரபரணியேகூட காணமல் போனால் ஆச்சரியப் படுவதற்கில்லை. உலகம், ரசனை, மனிதர்கள் எல்லாம் கரடு முரடாகிவிட்டன. சுந்தரத்து அக்காவைப் பார்த்து நாலு வருஷத் துக்கு மேலாகிவிட்டது இருக்கிறாளோ என்னமோ.

என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். பெரிதாக, விஷயம் மாதிரி இந்த வாழ்வை எழுதக் கூடாதா? சமீபத்தில் திருவனந்தபுரம் சென்றீர்களா? நகுலனைப் பார்த்தீர்களா? சோகத்தோடே வாழ்ந்து முடிந்து போக ஒரு தைரியம் வேண்டும். அதுதான் ஆன்மபலம். மீனாகுமாரிக்கும், சாவித்ரிக்கும், கமால்-அன்புரோசிக்கும் குருதத் துக்கும் இது இருந்தது.

மதுவும் சாரதாவும் நடித்த 'நதி' படத்தைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது. பாலஸ்-டி-வேல்ஸ் கொட்டகையைப் பூட்டி விட்டார் கள் தெரியுமா? அங்கே வைத்துத்தான். 'கரை காணா கடல்' என்ற சத்யன் நடித்த படத்தின் செகண்ட் ஷோவுக்கு வந்திருந்த உங்கள் அப்பாவைப் பார்த்தேன், மதுரம் நுள்ளித் தரு. நின் அரும பூ வாடியில் நீ தேடுவதாரை? புயலிலே ஒரு தோணி, புத்தம் வீட்டின் எளிமையை எந்த இலக்கியக் கொம்பனாலும் கொண்டுவர முடிய வில்லை. காட்டு ரோஜாவில் ஒரு சிறு காட்சியில் தோன்றிய பூ பீடி கம்பெனி டான்ஸர் கண்ணனைத் தெரியுமா? சரஸ்வதி அக்காவை நீங்கள் பார்த்ததுண்டா? கல்யாணியா பிள்ளை மகன் கல்யாணத்துக்குப் பாடின எம். எல் வசந்தகுமாரியின் கச்சேரியைக் கேட்டிருந்தால்தான் விபூதிபூஷன் என்ன சொல்ல வருகிறார் என்பது புரியும் வஸந்தகுமாரி அன்று லஸ் சீனிவாச சாஸ்திரி ஹாலில் பாடின லதாங்கி ராகத்தைக் கேட்ட பிறகு எந்த சங்கீதத்தைக் கேட்டால் என்ன கேட்காவிட்டால் என்ன? மதுரம், மதுரம் அது தான் இன்று எல்லா கலைத்துறைகளிலும் தொலைந்துவிட்டது. என்றாலும் உடன்குடியிலிருந்து குலசேகரபட்டிணம் ரோட்டில் இரண்டு பக்கமும் இன்னும் பனைவடரிகள் மைல் கணக்குக்கு நிற் கின்றன என்கிறார்கள் மோகமுள் ரங்கண்ணாவை சினிமாவில் காட்ட முடியுமா? யமுனாவை, அபிதாவைக் காட்ட முடியுமா? வாழ் நாள் பூராவும் ஒரே ஒரு உன்னதமான சொல்லை எழுதினால் கூடப் போதும் அடைய முடியாப் பொருளின் மீது ஆசை தீராது.

●

படிப்பகம்

padippakam

தேவதாசிகளும் ஹரிஜனங்களும்

பிரேமிள்

தமிழகத்தில் தேவதாசி முறை, மரபின் கட்டாயமாகவும் அவ்வப் போது வறுமையின் கட்டாயமாகவும்தான் தொடர்ந்திருக்கிறது. பொட்டுக்கட்டுதல் என்ற சம்பிரதாயமே தான் தேவதாசியை உருவமேயன்றி, அது ஒருகுலத்தொழில் அல்ல. கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவள்' என்று விதிப்பதற்காகவே, நெற்றியில் தங்கப்பொட்டு ஒன்று கட்டப்பட்டாலும், இப்படி விதிக்கப்பட்டவளின் கடமை கோவில் சார்ந்த தர்மவான்களின் காமத்தைத் தீர்ப்பதுதான். இந்த பழக்கம் சிந்து நதிப் பள்ளத்தாக்கின் பூர்வ திராவிடர்களிடமே ஆரம்பித்திருக்கலாம். (தர்மானந்த கோஸம்பி முதலியோரின் கருத்து.) இதன் மனோவியல் பண்பு, தன்னிடம் வருகிறவனை இறைவனாக தேவதாசி காணவேண்டும் என்பதுதான் அவளிடம் போகிற தர்மவானின் மனோவியல் பண்பு பற்றி எவரும் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. இதன் பூர்வ திராவிடக்கூறுப்பற்றி இங்கே பின்னாடி சொல்கிறேன்.

தமிழகத்தில் இரண்டு குறிப்பான குலங்களில் இருந்தே இப்பெண்களை எடுத்து வந்திருக்கிறார்கள் இந்த இரண்டு குலங்களும் இசைவேளாளர், செங்குந்த முதலியார் என்பவையாகும் இவர்களுடைய குலத்தொழில் இசையும் பரதமும். இதனாலேயே இவர்களின் மத்தியிலிருந்து பெண்கள் தேவதாசிகளாக எடுக்கப்பட்டுள்ளனரேயன்றிதேவதாசி முறைதான் இசையையும் பரதத்தையும் ஆண்டு வந்தது என்று கூறுவது தவறு. நம்மிடையே தேவதாசிமுறை இருந்தால், சங்கீதம், பரதம் போன்ற கலைகளை அது வளர்த்ததாகவும், இந்தமுறை போனபிறகு, இந்த நுண்கலைகள் தமிழகத்தில் மறைந்துவிட்டதாகவும் கூறும் கோவில் கலாச்சாரம் பற்றிய 'இந்தியா டுடே' மலர் இந்த தவறையே இழைக்கிறது.

படிப்பகம்

padippakam

இடங்களில் இன்றும் நடைபெறுகிறது. அங்கெல்லாம் ஈ.வேரா.வின் பகுத்தறிவு இயக்கத்தைப் போன்று கோவில் கலாச்சாரத்தையும் பகிஷ்கரிக்க எதுவும் நடந்ததில்லை என்பதே இதன் காரணம். அங் கெல்லாம், ஈ வே.ரா தமிழகத்தில் செய்த பணிபரவ சாகித்ய அகாதமி உதவ வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

'ஹரிஜனர்' என்ற காந்தியப் பிரயோகம் நம்மை இழிவு படுத்தும் சொல்' என்று குறிப்பிட்டு 'தலித்' என்றே குறிப்பிட வேண்டும் என்று மனித உரிமை முரசு (ஜுன் - ஜுலை 94) இதழ் தலையங்கம் வாதிட்டுள்ளது. இத்தலையங்கத்தில் இருந்து ஒரு விபரம் : ''1929ல் நார்சி மேத்தா என்ற குஜராத்திக் கவிஞன் தன்னுடையப் பாடலில் இந்து கோயில்களில் தேவதாசிகளாகப் பொட்டுக் கட்டி விடப்பட்ட நம்மின பெண்களுக்கும் பிறந்த குழந்தை களைக் குறிப்பிடும்போது 'ஹரிஜன்' என்ற சொல்லை பயன் படுத்தி னான். ஹரிஜன் என்றால் கடவுளின் பிள்ளை என்று பொருளாம். தேவதாசி என்ற இழிதொழிலை இந்து மதத்தின் மூலம் நம்மினப் பெண்கள் மீது திணித்த(து) ஆரியம் ..''

தேவதாசி முறையின் காரணர்கள் ஆரியர் என்பது கேள்விக் குரியது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அதே சமயத்தில் சிந்து நதிப் பகுதிக்கு வரு முன்பு ஆரியர்கள் நிலையூன்றியிருந்த மெஸப்புத் தேமியப் பகுதிகளில் கோவில் நடனக்காரர்கள் இருந் திருக்கிறார்களே, அங்கிருந்து இம்முறையை ஆரியர் கொண்டு வந்திருக்கலாமே என்று வாதிடவும் சிலர் முனையலாம். ஆனால் சிந்து நதி நாகரிகத்தின் அம்சங்களுள் மிக உயரிய ஆன்மிகப் பயிற்சி முறையாக, சரீரம் சார்ந்த விகாரங்களை மாற்றியமைக்கும் மனோவியல் ரஸவாதமாக இது பயிலப் பட்டிருக்கலாம் என்றுதான் ஒரு ஆழ்ந்த பார்வை காட்டும்.

ஏனெனில் இந்த ரஸவாதம், ஆண் மார்த்திகளிடையே ரகசியக் கல்வி முறையாக இந்தியாவில் காலம் காலமாக நீடித்து வந்திருக் கிறது. இவ்வகையில் இதன் ஆத்மார்த்தம் பிரிந்துபட கோவில் சார்ந்த விஷயமாகத் தொடர்ந்த மேலாதிக்க விபச்சார முறையே தேவதாசி முறை. ஆத்மார்த்தமானதாக மெஸப்பத் தேமிய முறையை காண இடமில்லை. அங்கிருந்து வந்த ஆரியர்களின் நூல்களினது பூர்வ வடிவமான ரிக் வேதத்தின் பகுதிகளை நாம் பார்த்தால், தந்தை வழியற்றுப் பிறந்த வசிஷ்டனை நாம் மறந்துவிடமுடியாது. இவன் தந்தை தெரியாமல் ஒரு பொய்கையில் மின்னல்கள் சூழ்ந்து கருக்கூடி தான் பிறந்ததாக தன்னை அவமதித்த விஸ்வாமித்திர னுக்கு பதில் கூறுகிறான்,

படிப்பகம்

padippakam

இந்தக் கட்டத்தில் சிந்து நதியின் பூர்வ மரபும் ஆரியமும் இணைவதாக நிபுணர்கள் கருதுகின்றனர் வசிஷ்டன் சிந்து நதி யின் மரபை அனுசரித்துப் பிறந்த ரிஷியாகக் கொள்ள இங்கே இடம் உண்டு அன்றைய ஆழ்ந்த ஆன்ம விழிப்பின் அடிப்படை யில் பயிலப்பட்ட முறையில் தான் கருக் கொண்டமையை மின்னல் கள் சூழப்பட்டு கருக் கொண்டதாக வசிஷ்டன் கூறியிருக்கிறான் எனலாம். இதில் இழிவு இல்லை. அன்றைய அந்த மரபின் உயர் குடியினரே இவர்கள் தாம் என்று கூறத்தான் இது வழி வகுக்கும் 'ஹரிஜன்' என்பதில் இதுவே பொதிந்து நிற்கிறது என்று வாதிக்க இடம் தருவதாகத்தான் பொட்டுக்கட்டப்பட்ட பெண்களின் குழந்தை கள் இவர்கள் என்ற விபரத்தைப் பார்க்கலாம் ஆனால் 'ஹரிஜன்' என்பதற்கு காந்தி இந்த அர்த்தம் தந்து அதைப் பயன் படுத்திய சரித்திரமே இல்லை. சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இவர்கள் எத்தகைய ஆழமான பொறுமை கொண்டவர்கள் என்பதை தென்னாப்பிரிக்காவில் இவர் கள் செய்த சத்தியாகிரக இயக்கம் காந்திக்கும் ஆன்ட்ரூஸிற்கும் காட்டியிருக்கிறது.

இதன் விளைவாக இந்த ஆழத்தைச் சுட்டுவதற்காகவேதான் காந்தி இவர்களை ஹரிஜன் என்றார். மேலும், தென்னாப்பிரிக்கா வில் காந்தியை சத்யாக்ரகத்துக்குத் தூண்டிய காரணி என்ன என் பதைப் பார்த்தாலே, பின்னாடி அம்பேத்கரும் இப்போது தலித் காரர்களும் காந்தியின் ஹரிஜன இயக்கத்தைக் கொச்சைப்படுத்தியே நிராகரிக்கிறார்கள் என உணரலாம். தென்னாப்பிரிக்க அரசு, காந்தி போன்ற உயர்மட்ட ஹிந்துக்கள், ஆப்ரிக்கர்கள், கீழ்மட்ட ஹிந்துக் களாக, தொழிலாளர்களாக அங்கிருந்த தீண்டப்படாதோர் யாவரை யும் ஒரேபட்டிக்குள் அடைத்து, அவர்களிடையே நடக்கும திருமணம் தென்னாப்பிரிக்கச் சட்டப்படி செல்லுபடியாகாது என்று விதித் திருந்தது.

எனவே காந்தி உட்பட ஐரோப்பியரல்லாத எல்லாருமே அந்தச் சட்டத்தின் கண்களில் bastards - தகப்பன் பெயர் தெரியாதவர்கள்- தேவடியாப் பசங்க. இதை இப்படி பச்சையாக மேல்மட்டம் கீழ் மட்டம் எல்லாம் உட்பட்ட பகிரங்கத்தில் விளக்கினார் காந்தி சட்டப் படிப்பை முடித்த பின்பு பம்பாயில் ஒரு வழக்காளிக்காக முதன் முதலில் ஆஜரான பழைய காந்தி, பேச்சே எழ முடியாமல் வழக்கை வேறொரு வக்கீலிடம் கொடுத்தவர். அதே காந்தி மேற் படி தென்னாப்பிரிக்க பிரச்சனைக் கட்டத்தில் உலகின் மிகப்பெரிய பேச்சாளிகளுள் ஒருவராகினார் இதன் உந்துதல், ஆதிக்க சக்தியின் முன்னால் அவர் தீண்டத்தகாதோரோடு உணர்ந்த சகோதரத்வம்.

படிப்பகம்

padippakam

அவர்களது தோட்டி வேலையைத் தாமே செய்ததுடன் தமது மனைவியாளையும் அவர் செய்ய வைத்திருக்கிறார். இவ்வளவு தூரம் அவர் தம்மை அவர்களுடன் பிணைத்த பின்னணியில், தமது போதகர்களாகவே அவர்களைக் காந்தி கணித்தார். இந்த மனோ பாவத்துடன் தான் காந்தி தீண்டத்தகாதோரை ஹரிஜன் என்றார்.

இது காந்தீய சரித்திரம் என்றும் காந்தீய நிறுவனங்களுக்கு அச்சாணியாக கருதப்படும் மனோபாவம் இது. ஆனால் அதிகாரமும் செல்வமும் செல்வர்க்கும் மட்டுமே உயர்நிலை என்ற மனோபாவம் இந்த மனோபாவத்துக்கு எதிரானது. அடக்கத்தின் மூலம் ஆழ்ந்த மனோதர்மங்களை விருத்திசெய்கிற மார்க்கங்களுள்ஒன்று காந்தீயம். அதில் குறைபாடுகள் இருந்தால் அவை அதன் வழிமுறைகள் ஒட்டி யவை. நிச்சயமாக அம்பேத்கரிஸ்டுகளும் 'மனித உரிமை முரசு'ம் கருதுகிற விதமான குறைபாடுகள் அல்ல காந்தீயத்திலுடையவை. பார்க்கப்போனால் சுய இனத்துக்கான அதிகார வேட்கையையே முன்வைக்கும் குறைபாடு அம்பேத்கரிஸத்தில் உண்டு. ஏனெனில் அவரது பிரகடனங்கள் யாவுமே, சுய இனச்சார்பு கொண்டவைதான்.

ஒரு அதிகாரக்கட்டுமானத்தினை இந்த இயக்கம் நிறுவினால் சுய இன ரீதியாகவே அது சலுகைகளை வழங்குமா? தகுதியை முன்னிறுத்தி அது செயல்படாதா? ஆனால் காந்தீயத்தின் அடிப் படை சுய இனச் சார்பு கொண்டதல்ல காந்தீயத்துடன் எல்லா மதத்திற்கும், சித்தாந்தங்களுக்கும் உரிய சிந்தனைத்தெளிவு கொண் டோர் ஒத்துழைத்திருக்கின்றனர் கிறிஸ்துவ பாதிரியான ஆன்ட் ரூஸிலிருந்து மார்க்ஸீய சரித்திர நிபுணரான தர்மானந்த கோஸம்பி வரை. இவ்வளவு ஆழ்ந்தகன்ற ஒரு இயக்கமாக தலித் இயக்கமோ அம்பேத்கரிஸமோ இருக்கிறதா என்ற கேள்வியைத்தான் 'ஹரிஜனா தலித்தா' என்ற பிரிவினைப் பேச்சு எழுப்புகிறது 'தலித்' இயக்க வாதிகள் ஒரு நிறுவனத்தை நடத்தினால், அதில் 'ஹரிஜன்' என்று தன்னை அழைப்பவனை மட்டமாக நடத்துவார்களோ? இந்தக் கேள்விக்கு இடமில்லாமல் இல்லை. ஏனெனில். அம்பேத்கரிஸத்தை யும் அதை ஒட்டிய தலித் இயக்கத்தையும் நிராகரித்து, தங்களை காந்தி வழியினர்என்றும் ஹரிஜனர் என்றும் கொள்வோர் உள்ளனர்.

இவர்கள் மிகவும் உறுதியான உள்ளம் கொண்டவர்கள். அம் பேத்கரை இவர்கள் நிராகரிப்பதன் முக்கிய காரணம், அவர் தீண் டப்படாதோரை புத்த மதத்தினர் ஆக்கியமை ஆகும் இது இவர் களுடைய கணிப்பில் ஒரு கலாச்சார வன்முறையாக கருதப்படுகிறது. இந்த உள்விபரத்தை தலித் இயக்கம் நேர்கொண்டதாகத் தெரிய வில்லை. சகட்டுமேனிக்கு காந்தி பற்றி அம்பேத்கர் சொன்னவற்றை

படிப்பகம்

padippakam

ஆராயாமல் ஏற்றுக் கொண்டு, ஹரிஜனர்களை தலித்துகள் அந்நியப்படுத்துகிறார்கள் என்றே தோன்றுகிறது. இவ்விடத்தில் பொட்டுக் கட்டப் பிறந்தவர்கள் பற்றிய வம்ச சரித்திரங்கள் தாம் பொருத்தமாகும். இதைத் தைரியமாக வெட்கமின்றி ஆராய்வது தான் உறுதியான இயக்க லட்சணம்.

தகப்பனார் பெயர் தெரியாதவன் இழிஞன் என்றால், யேசு கிறிஸ்துவை விட இழிஞன் என்று தன்னை வேறு எவனும் சொல்லி விட முடியாது. ஆனால் கிரீஸிலும் பௌத்தத்திலும் பிறந்த ஜனநாயகம், தகப்பனார் பெயர் தெரியாத யேசுவின் மூலம் தான் உலகெங்கும் பரவிற்று. இதன் அதிர்வில் விளைந்தவைதாம் காந்தீயமும் ஈ.வெ.ராவிஸமும் அம்பேத்காரிசமும் இந்த பின்னணியை சுவாதீனம் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்துத் தலைவர்களான செங்குந்த முதலிகளுடையவும் இசை வேளாளர்களுடையவும் நெருங்கிய உறவுக்காரப் பெண்கள் பொட்டுக்கட்டப்பட்ட விதிக்கு ஆளானதை நாம் இங்கே குறிப்பிட வேண்டும்.

அதிகாரக் கட்டுமானத்தைப் பிடித்த பிறகு இது வெட்கக் கேடானது என்று மறைக்கப்படுகிறது அப்படியானால் பொட்டுக் கட்டும் மரபு, தேவதாசி முறை, தீண்டாமை எதிலுமே இந்திய சரித்திரத்தில் இருந்ததே இல்லை என்று சொல்வதுதான் இப்படித் தங்கள் சரித்திரத்தை மறைப்பவர்களுடைய சரித்திர உணர்வாக இருக்க வேண்டும். அதாவது பெர்சனல் ஆனாலும் சரி, தேசியமானாலும் சரி சரித்திரம் சரித்திரமே. இந்த அளவு சரித்திர உணர்வற்ற மனோபாவத்தின் விளைவுதானே இந்தியாவின் முதல்பட்ச சாபக்கேடு? எனவே பொட்டுக்கட்டப்பட்ட சரித்திரப் பின்னணி உள்ளவர்கள் அதை ஏற்று இன்றைய பிரச்சனையச் சந்திப்பதுதான் வெட்கங்களைத் தாண்டிய ஒரு அச்சமற்ற இயக்கமாகும் அத்தகைய அச்சமின்மை இல்லாதவர்கள் தங்களை தலித் 'பேந்தர்' (சிறுத்தை) இயக்கத்தினர் என்று சொல்லிக் கொள்வது பரிதாபகரமானது. தகப்பன் பெயர் தெரியாத அடிமை முறையில் பிறந்த அமெரிக்க நீகிரோக்களின் பிரதிநிதி நான் என்று காட்ட, தமது பெயரை MALCOLM X என்று கொண்ட கறுப்பரை இங்கே வணங்குகிறேன்.

●

படிப்பகம்

padippakam

பன்முக இசையின் போர்வாள்
(ஓர் அறிமுகம் 1898-1962)

பேராசிரியர் ஹான்ஸ் ஐஸ்லர்

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற பல்வேறு இசை யமைப்பாளர்களில், நுகர்வு இசைக்கு எதிராக தனித்தன்மையை யும், வாழ்நாள் முழுதும் புரட்சிகர இயக்கங்களில் இணைந்து பல ஒப்பற்ற இசை வடிவங்களையும் பாடல்களையும் இயற்றி வரலாற் றில் தனக்கென்று தனி இடத்தை உறுதி செய்த ஒரு உண்மை இசை கலைஞன் ஹான்ஸ் ஐஸ்லர். தலைசிறந்த இசையமைப்பாளர், கோட்பாட்டாளர், பல அரிய கருத்துக்களையும், இசையின் பங்களிப்பு சமூகத்தில் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற வரையறையை அறிவித்தவர்.

20-களில் நாம் கிளாசிக்கல் இசை, இசையமைப்பாளர்கள் குறித்து பேசுமிடத்து SCHONBERG, STRAVINSKY, BARTOK மற்றும் SHOSTAKOVICH போன்றவர்களை நினைவு கூற தவறு வதில்லை. இவர்கள் அனைவரும் தனித்தன்மைக்கும் நவீன இசைக்கு தேவையான மூலப்படிவத்துடன் இணைந்தவர்கள் இவர் களுடன் ஐஸ்லர் ஒப்புநோக்கப்படுகிறார். அவரின் இசை காலத் தால் அழிக்க முடியாத ஒன்று.

சூலை 6-ந்தேதி 1898 ம் ஆண்டில் பிறந்தவர், அவரின் தந்தை ஆஸ்திரியாவின் தத்துவ அறிஞர் டாக்டர் ரூடோல்ப் ஐஸ்லர். (Dr RUDOLPH EISLER) கலை நயமும் தத்துவ பிண்ணனியும் அமைந்த, உயர் குடியில் பிறந்து வளர்ந்த ஐஸ்லர் நடுத்தர வர்க்கத்தின் கலை மற்றும் கோட்பாடுகள் குறித்து தீவிர எதிர் தன்மையை கொண்டிருந்தார், அதன் காரணமாக தடைகளும் முரண் பாடுகளும் நிறைந்த புதிய இசை வடிவங்களை உருவாக்குவதில் கவனம் கொண்டிருந்தார் அதனூடே அவரின் இசை வடிவங்கள் கலை நயம் மிளிரும் வண்ணம் இருந்தது அவரின் தனிச்சிறப்பு.

படிப்பகம்

padippakam

'DM/TRI SHOSTAKOVICH' ஐஸ்லரை பற்றி கூறுகையில், ''தனது கற்பனை திறனை தொழிலாளர்கள் முன்னேற்றத்திற்காக அமைதிக்காக புதிய சமுதாய த்தை உருவாக்குவதற்கு பயன்படுத்தி னார், அனல் பறக்கும் வார்த்தைகளுடன் புரட்சிகர இயக்கத்திற்கு புத்துயிர் ஊட்டி சகாப்தம் படைத்தவர், ''அவரின் பாடல்கள் தொழிலாளர்களிடம் உறைந்னள்ள போர்வாள்'' அவர் நம் எல்லோ ருக்கும் பிடித்த தலைசிறந்த வல்லுநர், தனது ஒப்பற்ற இசையால் எப்பொழுதும் முன்னணியில் நிற்பவர்'' என்கிறார். ஐஸ்லரை போன்ற கலைஞருக்கு நடுத்தர மக்களின் அங்கீகாரம் கிடைக்க வில்லை, இழித்தும், பழித்தும் அறியாமையால் பிதற்றித் திரிகிறார் என்ற கேலியும் முத்திரையும் பரிசாக கிடைத்தது

''HANS HEINZ STUCKENSCHMIDT'' ஐஸ்லரை நினைவு கூறுகையில், கம்யூனிஸத்தை கண்மூடித்தனமான எதிர்ப்பவர்களின் மனப்போக்கை பின்பற்றாமல் இருப்பவர்கள் 30களிலேயே ஐஸ்ல ரின் திறமையை உணர்ந்திருப்பார்கள் நடுத்தர வகுப்பில் வளர்ந் திருந்தாலும், அவர்களுக்கு எதிராக அதன் பிரதிபலிப்பு சிறுதும் இன்றி அதே சமயம் அவர்களின் உணர்வுகளில், இசைகளில் விடு வித்துக் கொண்டு, மிக அதிக அளவில் இசை அமைத்து தொழி லாளர்களிடம் மிகவும் பரவலாக பேசப்பட்டவர் அவர் என்று குறிப் பிடுகிறார், என்றாலும் இதே இசையமைப்பாளர் பின்னர் பொது நல கூட்டுக் கொள்கையாளர், கோட்பாட்டாளர் என்று ஜெர்மனிய குடியரசு கட்சி பிரகடனப்படுத்திய பொழுது, அவர் அரசியல், கலை மற்றும் கருத்தியல் கொள்கையாளன் என்ற நிலைக்கு எதிர்மறை யாளர் என்றும் சந்திக்க வேண்டியிருந்தது ஐஸ்லரின் ஆதரவாளர் களுக்காக 1970-ல் அவரின் படைப்புகளை Rebublic of Germany வெளியிட்டது.

பிரக்ட்டின் மீதான தடை நீங்கியதும் ஐஸ்லரின் படைப்புகள் படைப்பாளிகளின் மத்தியிலும், தியேட்டர்களிலும் விவாதிக்கப் பட்டன அவரின் இசை கிட்டத்தட்ட பிரக்ட்டின் கருத்துக்களை ஒத்திருந்ததால் மற்ற ஐரோப்பிய நாடுகளில் அவரின் படைப்பு கள் அலசி ஆராயப்பட்டன. இத்தகைய திடீர் மாற்றங்களினரல் ஐஸ்லரின் இசை நடுத்தர/உயர் வகுப்பின் இசையாக அங்கீகரிப்பும் மதிப்பும் வழங்கப்பட்டது அச்சமயங்களில் அவர்கள் ARNOLD SCHONBERG-ன் மதிப்புமிக்க வார்த்தைகளை உணர ஆரம்பித் தார்கள். அவரை BERG மற்றும் WEBERN-உடன் ஒப்பிட்டு SCHONBERG கூறியதை ஏற்றுக் கொண்டனர். மேலும் அவர் நான் கற்பித்தல், மிகத்திறமையும், துடிப்பு உள்ள இளைஞர்

படிப்பகம்

padippakam

ஐஸ்லர் என்று குறிப்பிடப்பட்டார். இதன் மூலம் New School of VIENNA - வின் பிரபலங்களில் ஒருவர் ஆனார். பலருக்கு அவரை புரிந்து கொள்வதில் சிரமம் இருந்தது, ஏனெனில் Schonberg - ன் மதிப்புரை யெற்றிருந்த போதும், கம்யூனிச ஆர்ப்பாட்டக்காரார் என்ற முத்திரையும் அவர் பெற்றிருந்ததே!

அரசியல் என்பது இசையை சார்ந்துள்ளது, இசையும் அரசியலும் ஒன்றை ஒன்று புறந்தள்ளுவதாக இருக்க முடியாது, ஒரு சமூகத்தில் இசையை சிதைத்து, நுகர்பொருளாக்கி மக்களிடையே தனிமைப்படுத்துதல் போன்ற மாபெரும் குற்றம் கண்டிக்கப்பட வேண்டும். இவை போன்ற இசை மனிதனை, சமூகத்தை, கலையை மிகப்பெரிய அளவில் பாதிக்கின்றது நமக்கு வேறு வழியில்லை. உயர் மற்றும் நடுத்தர வகுப்பினரிடம் செல்வது இயலாது உழைக்கும் வகுப்பினரிடம் செல்வது நல்லது ஏனெனில் நம்மை, வரலாற்றை உருவாக்குவதும், வளர்ப்பதும் அவர்கள் தான் என்று இசை குறித்த தன் புரிதல்களை தெள்ளத் தெளிவாக வலியுறுத்தியே வந்திருக்கின்றார். இது தர்க்க ரீதியான கருத்தாகக்கூட அவருக்கு தெரிந்திருந்தது, எனவே தான் அவர் தொழிலாளர்களின் தலைப்பட்ட சக்திகளுடன் உறவு கொண்டு சமூகத்தில் நிலவும் பல்வேறான படிநிலைகளை மாற்றி புதிய ஒளிமயமான படிநிலைகளை கொண்டு வர துடித்தார்.

மாணவர்கள் ஆசிரியர்களை மட்டுமே பின்பற்றுவார்கள் என்று அடிக்கடி நினைவு கூறுகிறார், தன்னை மாணவனாக மட்டும் கருதவில்லை,தொழிலாளர்களின் ஆதர்சனவனாக அவர்களின் உயிர் மூச்சாகவே செயல்பட்டார், ''எதையாவது என்காலத்தில் உபயோகமாக செய்து அதை மற்றவர்களுக்கு அள்ளி வழங்கும் குணம் எனக்கு மிகவுப் பிடித்தவை. இதை எனக்கு கற்றுத்தந்தவர்களே உழைக்கும் மக்கள் தான், நான் அவர்களை மிகவும் நேசிக்கின்றேன்.'' என்கிறார் இவை போன்ற எண்ணங்களினால், ERNST BUSCH உடன் சேர்ந்து வடிவமைத்த "THE RICHARD TANBER OF THE BARRICADES'' என்னும் Concert ஆகும்.

மிக சிறந்த நாடகமான "DIE MASSNAHME'' (The Measure Taken - Text by BRECT) டிசம்பர் 30-ல் நாடகத்திற்கு என தனது முதலாவது இசை பெர்லின் PHILHAROMIC அரங்கத்தில் நடைபெற்ற போது Choir இசைக்குழுவினருடன் சேர்ந்து பாடினார். ஐஸ்லரின் பாடல்கள் தடைகள் அனைத்தையும் எதிர்க்கும் வல்லமை பெற்றிருந்தன சோர்ந்து விழும் சோவியத் சோசலிஸ்டுகளை

படிப்பகம்

padippakam

உற்சாகப்படுத்த அவரின் பாடல்கள் பயன்படுத்தப்பட்டன, லண்டன் பாரீஸ், டெட்ராயிட் போன்ற நகரங்களிலும், சீனாவின் ''Eighth Route Army'' வீரர்களும் அவரின் பாடல்களை சோர்வு நீக்கும் மருந்தாக கையாண்டனர்- ஸ்பெயின் நாட்டின் மக்கள் போராட்டத்திலும் அவரின் பாடல்கள் வீரத்தையும், தன்னம்பிக்கையையும் வளர்த்தன. இத்தகைய இசை நுணுக்கம் கொண்ட ஐஸ்லர் ஜெர்மனின் முதலாம் சோசலிஸ அரசை பற்றிய தேசிய கீதத்தையும் வடிவமைத்தார் என்பது அவரின் இசைப்புலமைக்கு சான்று. ஐஸ்லரின் குறிப்பிடத்தகும் பாடல்களில் SOLIDARI TATSLIED, THE EINHE ITS FRONTLIED மற்றும் சமூகநீதி, சுதந்திரம் குறித்த கருத்தாழமிக்க பாடல்கள் HARSEILA ISE, The interna tional & Workers, Unity for the battle என்பவைகளை கூறலாம்.

ஐஸ்லரின் இசையை பொதுவாக பார்க்கும் பொழுது ஒரு இசைக்கலைஞர் உன்னதம் நோக்கி போராடுபவராகவே காணப்படுகிறார், இசையின் செயல்பாடுகளில் இசைக்கருவியில் எந்த ஒரு தடையும் விதிக்கவில்லை, தன்னை வேறுபடுத்திக் கொள்ளும் ஒரு முறையை கூட பின்பற்றவில்லை. அவரின் திறமைக்கு இது பொருத்தமாபடவில்லை,இதற்கு முற்றிலும் மாறாக இசை அமைப்பாளர்கள் மீது திணிக்கப்படும் பல்வேறு எதிர்பார்ப்புகள் அதன் காரணமாக Vocal வரிசையில் பலதரப்பட்ட பாடல்களை காணலாம். குழந்தைகள் பாட்டிலிருந்து குழுப்பாட்டு வரை பண்முகம் கொண்ட நேர்த்தியான Concert (ஒத்திசைவு) பாடல்கள், மிக குறுகிய கால Chanson சிறு பாடல், பெரிய இசையுடன் கூடிய பாடற்கதை (cantata) நாடகம், அதிக காலம் பிடிக்கும் நாடக இசை பண்புடன் (ORATORIO) கூடிய கச்சேரி போன்றவைகளை அவரால் உருவாக்க முடிந்தது, பெரும்பாலான பிரக்டின் நாடகங்களில் ஐஸ்லரின் இசையின்றி பார்க்க முடிவதில்லை, மேலும் ஐஸ்லரின் இசையின்றி பிரெக்ட்டின் நாடகங்களை கற்பனை பண்ணிக்கூட பார்க்க இயலாததாய் இருந்தது ஐஸ்லரின் Symphony (இயைவு கொள்பல்லியம்) மற்றும் Chamber Music முன்னவர்களைப்போல நுகர்வுக்கானதாக அமைக்கவில்லை அரசியல் சந்தேகங்களுடன் கூடியதாய் இருந்தது. அவரின் இசைவடிவம், தொனி அதன் பண்பு எல்லாம் முதலாளிய வகுப்பினரை நையாண்டி செய்வதாக இருந்ததால் இன்றளவும் அந்த வட்டாரங்களில் அவரின் இசை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மற்ற இசைவல்லுனர்கள் போலின்றி ஐஸ்லர் சிறந்த கோட்பாடுகளை கொண்டவர், திறமைமிக்க எழுத்தாளரும் கூட, பல

படிப்பகம்

padippakam

புத்தகங்களையும், பாடல்களையும் எழுதிய அவர் குறிப்பாக Faust opera - விற்காக் கவிதைகள் மற்றும் இசை நாடக சுவடி LIBRETTO எழுதியது மிக பிரபலமானவை. அவரிடம் இருக்கும் மற்றொரு சிறப்பு சிறந்த கவிஞர்களின் பாடல்கள் குறித்து குறிப்பு எடுத்துக்கொள்வது, HOLDERLIN-ல் தொடங்கி BRECHT வரை நீடித்தது. பின்பு புத்திசாலித்தனத்துடன் தனது இசையின் மூலம் சாதகமாக்கிக் கொள்வது. ஐஸ்லரின் புகழ் பெற்ற சொற்பொழிவான "The Crisis In Music" (இசையில் நெருக்கடி) என்பது டிசம்பர் 7-ல் 35 ஆம் ஆண்டு நியூயார்க் நகரில் டவுன் ஹாலில் நடத்தப்பட்டது "இன்றைய இசையில் தேக்கமிருப்பதை இசை அமைப்பாளர்களும் இசை பிரியர்களும் உணர்ந்திருக்கவில்லை. உணர்ந்திருந்தாலும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்வதில்லை. இசையின் வேகம். அதன் வகை, பாணி எல்லாம் சேர்ந்து ஒருவித தேக்கத்தை உருவாக்கியிருக்கிறது. நம் சமூக சூழலில், சந்தேகத்திற்கிடமின்றி இசை ஒரு உயர் இன்ப பொருளாக உருவடுத்து வருகின்றது. வறுமை ஒரு பக்கம் பெருகிக் கொண்டே இருக்க. இவ்வகை உயர் இன்ப இசைகள் குறித்து அரிய அபூர்வம் பெருகிக்கொண்டிருக்கிறது." இசையமைப்பாளர்கள் - அவர்களின் நம்பிக்கை, தேவைகளை ஒதுக்கி விட்டு, அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் - நாமும் இசையமைத்துக் கொண்டிருக்கிறோம் என்று. அவர்கள் உணர வேண்டும் சமூகத்தில் தனது பங்களிப்பு என்னவென்பதை, அதற்கு அவர்களின் இசை எவ்வகையில் உதவும் என்பதை உணர வேண்டும்! தங்களது முற்சாய்வுகளிலிருந்து தங்களை விடுவிக்காவிடில், அவர்களின் உள்நோக்கம் எதுவாயினும் - அவர்களின் இசை மிக பெரிய பங்களிப்பை செய்ய காத்திருக்கிறது என்பதை உணருவார்கள் எவ்வாறு எனில் போதை பொருட்களின் விற்பனையை போல"- என்று இசை குறித்து தனது ஆழமான விமர்சனங்களை கூறுகிறார்.

MARC BLITZSTEIN, June 23, 1936-ல் "NEW MASSES" என்ற பத்திரிக்கையில் ஐஸ்லரை குறிப்பிடும் பொழுது, அவரின் கோட்பாடுகளை, அழகியல் மற்றும் கலையுணர்வு பற்றிய விமர்சனங்களை குறிப்பிடுகிறார் 'ஐஸ்லர் ஒரு முதல்தரமான இசையமைப்பாளர், அவரின் கோட்பாடுகள் படைப்புகளில், இசையில் ஆழமாக வேரூன்றியுள்ளன. அவைகள் உண்மையிலேயே கலை நயம் மிக்கவை, உண்மையில் இருப்பவை, செயற்கையான வடிவம், போலித்தனம் ஏற்படுத்துபவை அல்ல, மனம் போனபடி அமைக்கப்படவில்லை - எதையும் மலிவாக தூண்டிவிடுவதற்காக வளர்க்கப்பட்டது அல்ல. ஐஸ்லரின் சொத்து இசை, அதை அவர் உலகளாவிய உழைக்கும் வகுப்பினருக்கு வாரி வழங்கியுள்ளார்."

படிப்பகம்

padippakam

பாசிசத்தினால் ஜெர்மனியிலிருந்து விரட்டப்பட்ட ஐஸ்லர் சுமார் 10 வருடம் அமெரிக்காவில் கழித்தார். அமெரிக்காவில் இருந்த பொழுதுதான் அதிகமான படைப்புகளை உருவாக்கினார். தன் அமெரிக்க வாழ்வு பற்றி பிறிதொரு சமயங்களில் குறிப்பிடுகையில் அமெரிக்காவில் மிரக்ட்டும், நானும் சேர்ந்து பல படைப்புகளை உருவாக்கினோம், எதற்கெனில் சோர்வு உணர்ச்சியை போக்க, எங்களது வெளியேற்றத்தால் நாங்கள் கண்டது மிகப்பெரும் ஆர்வம் வர்க்க உறவுகளில் ஏற்படும் இடைவெளியை அனுாவப் பூர்வமாக உணர்ந்திருந்ததால் உண்மையான, நியாயமான - பாசிசத்திற்கு எதிர்ப்பு மற்றும் சோசலிசத்திற்கு ஆதரவு, அத்துடன் சலிப்பிலிருந்து விடுவித்துக்கொள்ள இசை...இசை இசை எங்களது உயிர் மூச்சு என்கிறார்.

ஐஸ்லர் தனது வாழ்க்கையை நடத்துவதற்கு திரைப்பட இசையை தேர்ந்தெடுத்தார். ராக்பெல்லர் (Rock Feller) அமைப்பிலிருந்து ஊதியம் வழங்கப்பட்டது. அக்காலங்களில் அவர் DEUTSCHE Symphonic அடுத்து Solo's, Choir மற்றும் ORCHESTRA அமைப்பதில் தீவிரம் காட்டினார். பின்பு ஒரு சமயம் தனது DEUTSCHE SYMPHONIC குறித்து கருத்துகூறுகையில் உழைக்கும் வர்க்கத்தின் சர்வாதிகாரம் ஓங்கி நிற்கும் பொழுது இத்தகைய முயற்சிக்கு ஒரு அர்த்தம் கிடைக்கும், அது தற்பொழுது GDR-ல் உருவாகிவிட்டது என பெருமைபட கூறுகிறார். றேலும் சிம்பொனி குறித்து அவரின் கருத்துகள் நாம் கவனிக்கவேண்டியவை. ''அக்கால கட்டத்தில் Symphomy என்பதன் நோக்கத்தை விமர்சிப்பதே கடினமானது, எனவே முன்னேறிவரும் இசையமைப்பாளர்கள் Symphony யை புரிந்து கொள்ள வேண்டும் அது ஒரு வழக்கத்தில் இல்லாத கலை வடிவம், இத்தரைய கலை வடிவம் இனிமேல் இயற்றப்படகூடாது. தற்பொழுது நாம் காண்பது Vocal Music அதை தொடர்ந்து கருவிகளின் கலஃவயும் பல பரிணிமங்களுடன் அறிவியலின் தொழில் நுட்ப உதவியுடன் புதிய கோணத்தில் விரிவடைந்து வருகின்றது

அமெரிக்க வாழ்வில் தீவிர பாசிச எதிர்ப்பு கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றி, பண்பாடி, இசை அமைத்ததை JOE FOSTER என்ற அமெரிக்க இசை கலைஞர் Daily Worker - ல் குறிப்பிடுகிறார் உலகின் எல்லா நகரங்களிலும் ஆயிரக்கணக்கில், லட்சக்கணககில் உழைக்கும் மக்கள் தெருவிற்கு வந்து ஆளும் அரசுக்கு எதிராக, உரத்த குரலில் அவர்களை சாடிவரும் இத்தருணத்தில்

படிப்பகம்

padippakam

அவர்கள் படும் துயரங்களை, அவர்களின் தோழர்கள் சிறையில் படும் துயரங்களை சித்ரவதைகளை அவர்கட்கு எதிராக, ஒத்த கருத்தோடு, நன்றாக கைகோர்த்து, வீர முழக்கமிட்டு, நாடி நரம்புகள் புடைக்க தங்களது நியாயங்களை, ஆளும் அரசுகளின் மோசடிகளை, கொடுமைகளை அதிகார போதையை அடுக்கடுக்காக வீரம், வேகம், சூடு நிறைந்த சொற்களால் ஒன்றாய் ஒருங்கிணைத்து, ஒப்பற்ற தனது இசையினால் அவர்களை பாடவைத்து, அப்பாடலால் அனைவரையும் ஒருங்கிணைத்த தன்னிகரற்ற இசை மேதைதான் HANNS EISLER ஹான்ஸ் ஐஸ்லர் என்பதில் நான் பெருமைப்படுகிறேன ''என்கிறார். இதில் ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை, உலக நாடுகளில் PRAGUE, HOLLAND, VIENNA, PARIS, LONDON போன்ற நாடுகளில் அவருக்கு, அவரின் இசைக்கு பல கோடி உழைக்கும் மக்கள் அடிமை என்றே சொல்லலாம். அவரின் இசை அவர்களது வாழ்வின் உண்மையை உணர்த்தி வீரத்தை ஊட்டி, நியாயத்தை ஒன்று சேர்த்து போராடவைக்கும் உந்து சக்தியாய் திகழ்ந்ததால்.''

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மறைவிற்கு பின்பு கெடுபிடிகள் அதிகமாகி, ஐஸ்லரை கம்யூனிஸ்ட் என்றும் மாஸ்கோ உளவாளி என்றும் முத்திரை குத்தப்பட்டு நாட்டைவிட்டு மீண்டும் ஒருமுறை வெளியேறினார். அச்சமயத்தில் அவரது இசை நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து மிகப் பிரமாண்டமான 'பிரியாவிடை' இசை விழாவிற்கு ஏற்பாடு செய்தனர், அதில் கலந்து கொண்ட ஐஸ்லரின் இசைக்கும், பாடல்களுக்கும் அங்குள்ள மக்கள் கூட்டமே ஆர்ப்பரித்தது, இதுகுறித்து The daily News பத்திரிக்கை கூறும்பொழுது ''ஐஸ்லர் தனது இரண்டாவது வீட்டில் இருக்கிறார், அவரது செயல்பூர்வ நடவடிக்கைகளினால் இசையால் பல அமெரிக்கர்களை கவர்ந்திருக்கிறார், அதனால் அவருக்கு ஆதரவான எழுச்சிக்கனலை இன்று நாம் காண முடிகிறது. அமெரிக்கனிசம் என்ற பெயரில் வெறுப்பும், சகிப்புத்தன்மையும் அற்ற கூட்டம் இங்கே இல்லை'' என அவரின் பெருமையை எடுத்துரைக்கிறது.

மீண்டும் பெர்லின் திரும்பிய பிறகு ஜெர்மனி அவரின் நீண்ட கனவுகளை படிப்படியாக நனவாக்கி இருப்பதை மகிழ்வோடு நினைவு கூறுகிறார். தன் மொத்த அனுபவங்களை கொண்டு இசைத்துறைக்கென, சோசலிச இசை கழகத்தை (Socialist Music Culture) நிறுவினார், ஜெர்மனிய பல்கலைக் கழகம் அவருக்கு இசை மேதை பட்டத்தை வழங்கி தன்னை கௌரவப் படுத்திக்கொண்டது, மேலும்

படிப்பகம்

padippakam

இசை பேராசிரியராக பணிபுரிய அழைத்தது, அப்பொழுது தான் அவரின் வாழ்வில் முக்கிய குறிக்கோள் நிறைவேறியது, தனது எண்ணற்ற கருத்துக்களை உலக அரங்கில் முதன் முதலாக தனது நூல்கள் மூலம் வெளியிட்டார், அவரின் நெருங்கிய நண்பரும், நாடக மேதையுமான BERTOLT BRECHT அவரின் புத்தகத்திற்கு முகவுரை, மதிப்புரை எழுதினார். அவர் அப்புத்தகத்திற்கு முகவுரை, மதிப்புரை எழுதினார் அவர் அப்புத்தகங்களில் ஐஸ்லரை பற்றி குறிப்பிடும் பொழுது,

இங்கே அடிப்படை உணர்வு புரட்சியே, புரட்சி அதன் உச்சத்தில் அதை தனது ஒப்பற்ற இசையில் வடிவமைத்து. இவ்விசையை கேட்பவர்களையும், இசைப்பவர்களையும், ஒரு வர்க்கத்தின் யுகப் புரட்சியை அதன் சங்க நாதத்தை "இன்பத்திற்கு அடிப்படை ஊற்று உழைப்பே" என்ற தாரக மந்திரத்தை வலிமையுடன், வனப்புடன் பொறுமையுடனும், தொலை நோக்கு பார்வையுடனும் தன்னிகரற்ற இசையின் மூலம் உலகத்திற்கு உணர்த்தியவர், இசையின் உண்மையான கிளர்ச்சியாளர் ஹான்ஸ் ஐஸ்லர் ஆவார்.

●

போராட்டத்தில் விளைந்த பாடல்

1957 நேர்காணல்

☐ பேராசிரியர் ஐஸ்லர் அவர்களே, பாட்டாளி மக்களின் இசை அதன் பாரம்பரியத்தை பற்றி விளக்கமாக கூறமுடியுமா?

○ முதலில் இவ்விசையின் பாரம்பரியத்தைப் பற்றி யாரும் அதிகம் அறிந்திருக்கவில்லை இதன் பாரம்பரியம் என்று கூறும் பொழுது இதை "உழைக்கும் வர்க்கத்தின் இசை" என்று கூறுவது பொருத்தமானது இதன் பாரம்பரியம் மிக பழமையானது நான் இதன் வரலாற்று காரணங்களை அதிக அளவில் தெரிவிக்க விரும்பவில்லை. இருந்த போதிலும் 19-ம் நூற்றாண்டின் நடுவில் உழைப்பாளர்கள் இசைக்குழு இருந்ததாக தெரிகிறது.

☐ அச்சமயம் சமூக - சனநாயக உழைக்கும் மக்கள் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது தானே?

○ இளைய சோசலிஸ்ட் உழைக்கும் மக்களின் இயக்கத்துடன் தானே! அது அன்று அவ்வளவாக வளரவில்லை, ஆனாலும்

படிப்பகம்

அதில் அத்தனை சாராம்சங்களும் இருந்தன எல்லாமே நேர்த்தியானவை என்று சொல்வதற்கில்லை, பாரம்பரியமிக்க நாட்டுப்புற பாடல்கள், (நாடோடி) யாத்திரிகர்களின் பாடல்கள் என சில வகைகள் இருந்தன. அக்கால கட்டத்தில் உண்மையான உழைக்கும் மக்களின் பாடல்கள் துளிர்த்து வளர்ந்து கொண்டிருந்தது, இன்று அவைகள் அவர்களின் மாபெரும் பொக்கிஷம் உதாரணமாக LEIPZIG-ல் 1860-ல் உழைக்கும் மக்களின் பாடல்கள பாடப்பட்டன, அது உயர்குடி மக்களின் இலக்கியம் போல் இல்லை.

☐ எங்கிருந்து இவ்வுழைக்கும் வர்க்கத்தின் பாடல் குழுவிற்கு பாடல்கள் கிடைக்கிறது? அது சாதாரண கிராமிய பாடலா? அல்லது அரசியல் புரட்சி செயய ஏற்படுத்தப்பட்டதா?

○ பொதுவாக அவைகள் இனிமை நிறைந்த நாட்டுப்புற பாடல்களே, ஆனால் சரியாக அமைக்கப்படாதது, 19-ம் நூற்றாண்டின் மத்தியில் பல புரட்சிகர கவிஞர்கள் தோன்றினார்கள், Herwegh உதாரணத்திற்கு அவரின் அற்புதமான கவிதை (BET UND ARBEIT, RUFT DIE WELT) (Prayer and the Labour Calls the World) உழைப்பும், ஜெபமும் உலகை அழைக்கிறது. இக்கவிதைதான் சமூக உழைக்கும் வர்கத்தின் இளைஞர்களை சுண்டி இழுத்த பாசுரங்கள் இசையமைப்பாளர்கள் உழைக்கும் மக்களின் இசைக்குழு நடத்துனரிலிருந்து வந்தவர்கள். (உ-ம்) புகழ்பெற்ற VTAMANN உத்மான் ஒரு இசைக்குழுவின் நடத்துனரும் மற்றும் ஆசிரியரும் ஆவார், அவரின் காலம் 1890லிருந்து 1910 அவ்விசைக்குழுவின் புகழ்பெற்ற பாடல் (The flag shall fly, through the man fall) மனிதன் வீழ்ந்தாலும் கொடி பறக்கட்டும்''

☐ மேற்சொன்னது இழைப்பவர்களின் பாடல் மற்றும் இசையைப் பற்றி உழைக்கும் மக்களின் இசைக்கருவிகள் அதன் பாரம்பரியம் குறித்து கூற இயலுமா?

○ நிச்சயமாக, உழைப்பவர்களின் இசைக்குழு ஒன்று மிகப் பழமையான காலந்தொட்டே இருந்து வந்துள்ளது, அந்த பகுதியில் உள்ள நல்ல இசைக்குழு போல இவர்களும் இருந்து வந்தனர், இயற்கையாகவே அவர்கள் உலகப் புகழ்பெற்ற மக்களின் பாடலான INTERNATIONALE மற்றும் MARSEILLAISE

padippakam

போன்ற பாடல்களை இசையமைத்து வந்தனர். VEIMAR REPUBLIC-ல் ரசியாவினுடைய புரட்சிகர வீரர்களின் அணி வகுப்பு பாடல்கள், இனிய இசைகள் போன்றவற்றை மிக தெளிவாக இசையமைத்து, அதன் கலைநயம் மாறாமல் மக்களுக்கு படைத்து வந்துள்ளனர், இத்தகைய இசை எல்லா இடங்களிலும் கேட்க இயலாது, இதில் பகட்டுகள் கிடையாது. குறிப்பாக நடுத்தரவர்க்க பகட்டுடன் கூடிய, துடுக்குத்தனத்துடன் இதை அறிய இயலாது, அதற்குரிய மரியாதையுடன் அணுகுதல் அவசியம்.

☐ இருபதாம் நூற்றாண்டுகளைப் பற்றி குறிப்பிடுகிறீர்கள், சரி. இந்த உழைக்கும் வர்க்கத்தின் இசை அக்காலகட்டத்தில் ஒரு உச்சிக்கு அல்லது முடிவுக்கு செல்லவில்லையா?

○ இது ஒரு சிகரத்தை அடைந்தது, ஏனெனில் பல இசையமைப்பாளர்கள், இசைவித்தகர்கள், பாடலாசிரியர்கள், நடிகர்கள் என பலபேர் இதில் இணைந்தார்கள். (உ-ம்) 1928-29ல் BERTLOT BRECHT பாடலை எழுத ERICH WEINERT-ம் பாடல்களை எழுத, நடிகரும், பாடகருமான ERNST BUSCH பாட, இசையமைப்பாளர் என்ற வகையில் மன்னிக்கவும் நானும் இசைக்க இன்னும் பல கலைஞர்கள் உட்பட ஒரு தயாரிப்பு வெளி வந்தது, எனவே நீங்கள் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும், இன்று உலகப் புகழ் பெற்ற நடிகர் அன்று உழைக்கும் மக்களின் இயக்கத்தில் இருந்தவர் என்பதை, இது மிக்க தரம் வாய்ந்த தயாரிப்பு, அதி நவீனத்துடன் கூடிய கலை நயம் மிக்க படைப்புகள்,

☐ உழைக்கும் மக்களின் பாடல்கள் 20 களில் எப்பொழுது முதன் முதலாக அரங்கேறியது? ERNST BUSCH எப்பொழுது முதன் முதலில் பாடினார்?

○ ERNST BUSCH என்னுடன் சேர்ந்து 1928ல் பாடினார். அச்சமயம் தொழிலாளர்கள் அனைவரும் குழுமியிருந்தனர், சோவியத்தின் மக்கள் கவி மாயா கோவ்ஸ்க்கி உடன் இருந்தார் அந்நிகழ்ச்சி மிகப்பெரும் வெற்றியாக அமைந்தது, ERNST BUSCH ஒரே இரவில் BEBLIN நகர தொழிலாளர்களின் வீடுகளில் உச்சரிக்கும் பெயராக புகழ்பெற்றுவிட்டார்.

படிப்பகம்

☐ என்ன அப்படி அவர் பாடினார்?

○ BRECHT, ERICH WEINERT மற்றும் TUCHOLSKY எழுதிய பாடல்களை பாடினார். அதோடில்லாமல் பிரக்ட்டுடன் நெருங்கிப் பழக வாய்ப்பும் கிடைத்தது, பிரக்ட்டும் அவர்மீது மிகுந்த ஈடுபாட்டுடன் பழகினார். மற்றொரு பாடகரும் நடிகருமான HELENE WEIGEL க்காக நானும், பிரக்ட்டும் பாடல்கள் எழுதியுள்ளோம். அது(The Cradle Song for Working Class-Mother உழைக்கும் தாய்மார்களின் தாலாட்டுப் பாடல், அதன் பிறகு இருவரும் ஒரு நாடகம் அமைத்தோம், அதன் பெயர் தாய் (MOTHER)அதன் பின்பு DEDACTIC PLAY போதனை நாடகம் (THE MEASURES TAKEN).

☐ எப்பொழுது பாட்டாளி மக்களின் கீதம் இசைக்கப்பட்டது? என்ன பாடல் எழுதப்பட்டது?

○ சிறிது மது அருந்தும் இடமோ, பெரிய அறைகளோ அல்லது நாடக அரங்கங்களோ எதுவாயினும் ERNST BUSCH, HELENE WEIGEL, BRECHT மற்றும் எனக்கு இந்த இடங்கள் போதுமானவையே. DIE MASSNAHME-ல் முதலாவது அரங்கேற்றம் BERN BURGER தெருவில் உள்ள பழைய PHILHARMONIC அறையில் நடந்தேறியது. அதே நிகழ்ச்சி மீண்டும் அடுத்த நாள் ERNST BUSCH பாட நான் பியானோ இசைக் ALEXAN DER PLATZ என்னுமிடத்தில் ஒரு சிறிய பாரில்(BAR)நடந்தது.

☐ இப்படியாக நீங்களும் ERNST BUSCH, BRECHT எல்லோரும் அரசியல் போராட்டத்தில் நேரடியாக பங்கு கொண்டீர்களா?

○ ஆமாம். நிச்சமாக நாங்கள் ஈடுபட்டோம். ஏதேனும் புதியன நிகழ்ந்தால் முதலில் எனக்கு தொலைபேசியில் தெரிவிப்பது பிரக்ட்தான் ''அதைப் பற்றி உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும்'' என துடிப்புடன் குறிப்பிடுவார்.

☐ Concert (ஒத்திசைவு) குறித்து உதாரணம் சொல்லமுடியுமா?

○ பிரக்ட் நாட்டுப்பாடல்கள் பாணியில் இரண்டு நிகழ்வுகளைப் பற்றி எழுதினார். Paragraph 218[3] -அதாவது கருக்கலைப்புக்கு எதிரான ஜெர்மனியின் தண்டனைக்குரிய சட்டம் குறித்தது, Osthilife Scandel - 'கிழக்கத்திய உதவி' என்ற பெயரில் கிழக்கு ஜெர்மனிய விவசாயிகளுக்கு நிதி உதவி செய்ததில்

padippakam

அதிபர் HINDEN BURG ஊழல் செய்ததை பற்றி, நானும் பிரக்ட்டும் இணைந்து (Sing of the Unemployment) "வேலை யற்றோரின் பாடல்" வேலையில்லா திண்டாட்டம் பெருகி வந்த நேரத்தில் எழுதினோம். 1929-ம் ஆண்டு தேர்தல் பிரசாரம் எங்களுடைய கருவாக இருந்தது. அந்த சமயத்தில் BERLIN நகரத்தில் SOCIAL DEMOCRATIC-ல் தலைவர்களாக இருந்த வர்கள் ஒரு சோப்பை எல்லோருக்கும் வழங்கினார்கள். அதில் SPD க்கு வாக்களியுங்கள் என எழுதப்பட்டிருந்தது இதைப் பார்த்ததும், இது குறித்து பாடல் எழுதி, இசையமைத்து அரங்கேற்றம் செய்வது எங்களுக்கு கைவந்த கலையாயிற்றே! SEIFENLIED-ன் (Soap Song) சோப்பு பாடல் என பிரபல மானது. Social-Democratic நண்பர்கள் என்னை மன்னிக்க வேண்டும். யாரையும் காயப்படுத்தும் நோக்கம் எனக்கில்லை, அப்பாடலில் "நாங்கள் எங்கள் கைகளை மீண்டும் கழுவிக் கொள்கிறோம்" என்று இரு பொருள் படும்படி பாடல் வரி களை அமைத்து, அதை ERNST BUSCH பாட பார்வையாளர் களிடையே உற்சாகம் கரைபுரண்டு ஓடி, ஒரு பரபரப்பான சூழ்நிலை உருவானது. புத்திசாலியான சமூக - ஜனநாயக (Social Democratic) தோழர் நிச்சயம் சிரித்திருப்பார். ஒரு கம்யூனிஸ்டைப் போல அல்லது எந்தக்கட்சியையும் சாரர்த ஒருவரைப் போல, இதை நீங்கள் HOT MUSIC என அழைப் பீர்கள், அதுபோல, மேலும் அந்த தேர்தல் காலகட்டத்தில் தேவையான ஒன்றாக கருதப்பட்டது. நான் மகிழ்வோடு நினைத்து பார்க்கிறேன். ERNST BUSCH "SEIFENLIED" என்று சொன்னவுடன் ஆரவாரமும், சிரிப்பலையும் கைத்தட்ட லும் கலந்து அந்த அரங்கத்தையே அதிரவைத்து. அது அடங்க பல நிமிட நேரம் பிடித்தது.

□ இந்த உழைப்பவர்களின் இசை 1933-ல் தடைபெற்றது, தற் பொழுது நாடுவிட்டு குடிபெயர்ந்த நிலையில் எவ்வாறு இருக்கிறது?

○ நாங்கள் ஜெர்மனியில் செயல்பட்டது போலவே இங்கும் செயல் படுகின்றோம். மொழி புதிதாய் இருப்பதால் அதை கற்க முயற்சி செய்கிறோம். நாங்கள் அரசியல் காரணங்களால் நாடு கடத்தப் பட்டவர்கள் என்ற முத்திரையோடு செயல்பட்டுக்கொண்டிருக் கிறோம். எப்படியானாலும் எங்களால் முடிந்ததை செய்து கொண்டிருக்கிறோம்.

படிப்பகம்

padippakam

□ என்ன பாடல்கள் தற்பொழுது எழுதியிருக்கிறீர்கள் அல்லது இசையமைத்து உள்ளீர்கள்?

○ UNITED FRONT SONG என்ற பாடல், இது முதலில் லண்டனில் 1934-ஆம் ஆண்டு எழுதப்பட்டது, அப்போது மக்கள் முன்னேற்ற காங்கிரஸில் உழைக்கும் மக்களிடையே ஒற்றுமை தேவைப்பட்டது, BRECHT எனக்கு தகவல் அனுப்பினார், உடனே எழுதி, இசையமைத்து ERNST BUSCH அடுத்த நாளே ஆங்கிலத்தில் பாடினார்.

□ சில நாட்கள் கழித்து உலகத் தொழிலாளர்கள் எல்லாம் இப் பாடலை பாடினார்கள் - இல்லையா?

○ ஆமாம் - நிச்சயமாக.

□ நீங்கள் அடிக்கடி பிரெக்ட்டை பற்றி குறிப்பிடுகிறீர்கள், அவரின் அரசியல் பங்கேற்பு பற்றியும் கூறுகிறீர்கள் .... ?

○ அது இன்னும் சரியாக அறியப்படவில்லை பெர்லின் தொழிலாளர் தோழர்கட்கு அப்போது அவர்கள் Cabaret-ல் வேலை செய்து வந்தவர்கள், அவர்களுக்காகவும் பாடல்கள் எழுதிவந்துள்ளார் என்பதை மறக்கக்கூடாது.

□ இந்த பாரம்பரிய இசை 20களின் நடுவில் ஆரம்பித்து இந்த நூற்றாண்டின் இறுதியில் உச்சக்கட்டத்தை அடைந்தது இன்று 1945ல் எங்களுடைய குடியரசில் மீண்டும் கையாளப்படுகிறது இல்லையா?

○ ஆமாம். உண்மை, இந்த பாரம்பரியங்களிலிருந்து நாம் அறியலாம். (உ-ம்) நெகிழ்வான எங்கள் வழிவகையால் தனித்தன்மை மிக்க தங்கள் செயல்பாட்டில், அரசியல் கண்காணிப்பால் தினசரி நிகழ்வாக நாம் கொண்டுள்ளோம், இவை எல்லாம் சேர்ந்து இசையின் புதியபாகுபாட்டை வெளிப்படுத்திற்று இசைப் பிரியர்களாகிய நாம் இன்று நினைவுகூற வேண்டும். எந்தகேள்விக்கும் இடமில்லாமல் இன்று இந்த பாரம்பரியத்தை நாம் தொடர கடமைப்பட்டுள்ளோம். சமீபத்தில் WERNER SEELENBINDER HALLல் அக்டோபர் புரட்சியின் 40 ஆண்டு விழாவிற்கு ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்த சமயம் எனது நண்பர் Kuba ஒரு சிறிய கவிதையை கொடுத்து இதற்கு விரைவாக இசை அமைத்து தர

படிப்பகம்

padippakam

இயலுமா?என வினவினார்,உடனடியாக அதற்கு இசையமைத்து GIEBLA MAY-யுடன் ஒத்திகை பார்த்து நிகழ்ச்சியில் சேர்த்தேன்.

☐ அது Sputnik பற்றிய பாடல்தானே?

○ இல்லை, ஸ்புட்னிக் பாடல் பிறகு வந்தது, இது இரண்டு சகோதரிகளைப் பற்றியது மாஸ்கோ - பெர்லின் அது அரங்கேறும் முன்பு ஒரு இளைஞன் கையில் 5 பாடல்களை கொண்டு வந்து இதையும் சேர்த்துக் கொள்ள இயலுமா? என்று வேண்டினான், எனவே அதையும் சேர்த்து பாடினோம் அது ஞாயிற்று கிழமை காலையில் என்று நினைக்கிறேன். ஸ்புட்னிக் குறித்து அறிந்து கொண்டேன் அடுத்து மாலையில் ஸ்புட்னிக் பற்றி புதிய பாடல் இயற்றி இசையமைத்து பாடினேன். சுமார் 7000 மக்கள் முன்னிலையில் அது பாடப்பட்டது, இதற்கு முன்பு இத்தகைய மகிழ்வு நிலையை ERLINல் காணவில்லை. GISELAMAYக்கு நல்ல வரவேற்பும் கிடைத்தது.

☐ இந்த பாரம்பரியம் உழைப்பவர்களின் பாடல்களுக்கு மட்டுமா? அல்லது இசைக்கருவிகளுக்கா? அல்லது இசை நாடகமா அல்லது மற்றபிற இசைத்துறைகளுக்கு என்று கருதுகிறீர்களா?
எல்லாவற்றிற்கும் தான், நாங்கள் இசைக்குழுவிற்கும், இசை நாடகங்கட்கும் Chamber Musicக்கும் மற்றும் பாடற்கதை நாடகத்திற்கும்(Cantatas) பாடல்கள்; இசை அமைத்துள்ளோம். ஆனால் இன்று நம்மிடையே எங்கே அத்தகைய திறமையுள்ளது? ஒரு இசை அமைப்பாளருக்கு எல்லா துறையிலும் திறமையும் ஆர்வமும் வேண்டும், நான் கூறுவேன், இன்னும் நாம் சமூகத்திற்கு நிறைவு தரும் வகையில் உயரவில்லை, நமது தினசரி நிகழ்வுகளிலிருந்து நாம் வாழ்க்கையை அணுகினால்,அதை முதல் பொருளாக, சாட்சியாக முன்னிறுத்துவமேயானால் நமது புதிய மக்கள் எப்படி நம்மை ஏற்றுக் கொள்வார்கள் என்பதை காணலாம். இது ஒரு பக்க நிகழ்வு அல்ல, நமது இசை அமைப்பாளர்கள் அமைதியாக, நிதானமாக Symphony சிம்பொனி எழுதுவார்கள், அதற்காக வேலை செய்வார்கள், ஆனால் அவையோ நமது தினசரி வாழ்வின் நிகழ்விற்கு நேரடி தொடர்பு அற்றதாக உள்ளது. மற்றொரு வகையில் அது தொடர்புடையதாக உள்ளது. ஒன்று மற்றொன்றை

படிப்பகம்

padippakam

ஒதுக்குவதில்லை. அதற்காக ஒவ்வொரு இசையமைப்பாளரும் Cabaract எழுதவும் என்று சொல்லவில்லை. அதற்காக அவர் மிக உயர்ந்த வேலை மட்டும் செய்து கொண்டு மற்ற உள் நோக்கு நிகழ்வுகளை புறக்கணிக்க வேண்டும் என்பதல்ல, உங்களுக்கு பிடித்திருந்தால் ஒரு மூன்று மாத கால அவகாசம் எடுத்துக்கொண்டு சிம்பொனி எழுதலாம். பிறகு Symphony யோடு திரும்பி வந்து மற்றபிற வேலைகள் (இசையில்) செய்ய லாம், வேலை என்பது பன்முகம் கொண்டது, அதில் பல வகை யான சொத்துகள் நமக்காக காத்துக் கொண்டிருக்கின்றன.

●

படிப்பகம்

padippakam

சுய சித்திரத்திற்கான குறிப்புகள்
(மே 1935 — 7 மார்ச் 51) தேர்ந்தெடுக்கப்பட்டவை

ஆல்பர் காம்யு

I. மே 1935 — செப்டம்பர் '37

மே 1935

நான் சொல்லவருவது இதைத்தான் : கற்பனா சக்தி இல்லாமலேயே ஒருவனால் வறுமையின் கொடுமையை உணர முடியும். பணம் இல்லாமல் வாழக்கூடிய சில காலங்கள் போதுமானது, நம்மை உணர்வுப்பூர்வமாக உந்தித்தள்ளுவதற்கு. இக் குறிப்பிட்ட விஷயத்தில், ஒரு மகன் தனது தாயின் மீது கொண்டிருக்கக்கூடிய விநோத ஈடுபாடானது அவனுடைய மொத்த உணர்வுத்தளத்தையும் ஆக்கிரமிப்பதாகிறது. பின்னாட்களில் பரந்து பட்ட பல்வேறு துறைகளிலும் அவனுடைய இளமை காலத்தின் ஞாபகங்கள் (ஆன்மாவுடன் ஒட்டிக்கொண்ட பிசின் அது) உணர்வுக் கீற்றுகளாக வெளிப்படும்.

இதைப் புரிந்து கொண்டவர்கள் நன்றிக் கடன்பட்டவர்களாக உணரும் அதே சமயம் தன்னையுமறியாத குற்றவுணர்விற்கும் ஆட்படுவது தவிர்க்க முடியாத ஒன்று. வேறு ஒரு வாழ் நிலைக்கு அவன் நகர்ந்துவிட்டால், பழையவற்றுடன் நிகழ் காலத்தை ஒப் பிட்டுப் பார்க்கையில், மிகப்பெரிய வளமையை இழந்துவிட்டதான உணர்வையே அவன் அடைவான். பணம் படைத்தவர்களுக்கு வானம் மிகச் சாதாரணமானது; இயற்கையின் இன்னுமொரு பரிசு அவ்வளவுதான். ஆனால் ஒரு ஏழை வானத்தை அதன் தன்மை யிலேயே பார்ப்பான். அவனுக்கு அது ஒரு முடிவற்ற அற்புதம்.

குற்ற உணர்வு என்பது ஒத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. ஒத்துக்கொள்ளப்பட்டவையே கலை. நானே இதற்கான சாட்சி. விஷயங்களை தெளிவாகப் பார்க்க முடிந்த தருணங்களில், ஒன்றே

படிப்பகம்

padippakam

ஒன்றைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த வறுமையான வாழ்நிலையில், இந்தப் பயனற்ற பணிவான மக்களுக்கு மத்தியில் நான் தொட்டுள்ள பகுதிகளை குறித்து நான் உணர்வது நிச்சயமாக இதுதான் வாழ்வின் உண்மையான அர்த்தம். கலையின் பங்களிபபு எந்தவிதத்திலும் போதுமானதல்ல. கலை மட்டுமே எனக்கு எல்லாமுமாக இல்லை. குறைந்தபட்சம் அதுவும் ஒரு வழி.

கோழைத்தனமான சிறிய செயல்கள், குற்றமுணர்ந்து வெட்கி நிற்கும் நேரங்கள், இன்னொரு உலகு குறித்து சிந்திக்கும் முறை பணக்கார உலகம் குறித்து, போன்றவைகளை அது குறித்த யோசனை இன்றியே சிந்திப்பவைகளையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். நான் நினைக்கிறேன் ஏழைகளின் உலகம் முழுமையாக தங்கள் முகமாக தாங்களே திரும்பிக் கொள்கின்றனர். இந்த உலகம் சமூகத்தில் ஒரு தீவாகிவிடுகிறது, இங்கே யார் வேண்டுமானாலும் எளிதாக நுழையலாம், எது வேண்டுமானாலும் செய்யலாம் ராபின்சன் குரூஸ் (Robinson Crusoe) போல.

இவை எல்லாம் தாய் - மகன் உறவு குறித்த ஆய்வின் மூலம் வெளிப்படுத்த வேண்டும்,

நான் எழுதியிருப்பது பொதுவான விஷயங்களுக்கே பொருந்தும். குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு ஒருவன் வருவானேயானால், எல்லாமும் சிக்கல் வாய்ந்ததாக மாறிவிடும்.

1. ஒரு அமைப்பு. பக்கத்து வீடுகளில் வசிப்பவர்கள்.
2. தாய் - அவள் செய்யும் பணிகள்.
3 தாய்க்கும் மகனுக்குமான உறவு.

தீர்வு என்ன? அந்தத் தாய்? மகனின் தாயக நாட்டம் தன் தாயின் உருவக வடிவின் மூலம் - உறவின் மூலம் உயிர் பெற்று நிலைக்குமா?

○

நகைச்சுவை குறித்த கருவும் முக்கியத்துவம் வாய்ந்ததே. கடும் துயரமான காலகட்டத்தில், நாம் தனிமைப்படுத்தப்பட்டு விட்டோம் என்கிற உணர்வுதான் நம்மைக் காப்பாற்றும் உணர்வாக இருக்கிறது - மற்றவர்கள் இரக்கம் காட்ட இயலும் அளவிற்கு உட்பட்ட தூரத்தில் தனிமைப்பட்டுள்ளோம் என்ற உணர்வு. இந்த உணர்வினுள்தான் நாம் மகிழ்வுறும் காலங்கள் பொதிந்துள்ளது.

படிப்பகம்

padippakam

நம் இன்பத்தில உரைந்துள்ள முடிவில்லாத சோகத்தை எல்லோ ராலும் கைவிடப்பட்ட நிலையில் நாம் காண்கிறோம். இந்த உணர்வினுள் நிலைத்திருப்பது இதுதான். "துக்கத்தில் தன்னிரக்கம் கொள்ளும் ஒரு விழிப்புணர்வே நமது இன்பம்".

கடவுள் ஏழைகளின் மீது தன்னிரக்கம் காட்டுகிறார், எவ்வாறு எனில், நோயையும் அதற்கான தீர்வையும் அருகருகே வைத்திருப் பது போல.

○

செப்டம்பர்

"கிறிஸ்த்துவத்தை புரிந்து கொள்ளவில்லை, ஆறுதல்கள் இன்றி நான் வாழ விரும்புகிறேன்" என்று நீங்கள் சொல்வீர்களே யானால் நீங்கள் குறுகிய மனப்பான்மையும் தவறான எண்ணப் போக்கையும் உடையவராவீர்கள், ஆறுதலின்றி நீங்கள் வாழ்வதாக வைத்துக் கொள்வோம். கிறிஸ்த்தவர்களின் நிலையைப் புரிந்தவன், நேசிப்பவன் என்று அப்பொழுது சொல்வீர்களானால் நீங்கள் ஒரு ஆழமில்லாத நுண்கலைப் பிரியர் என்றே நான் சொல்வேன். மக்கள் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணவலையிலிருந்து நான் மெல்ல வெளியேறத் தொடங்கியுள்ளேன்.

செப்டம்பர் 1937 - ஏப்ரல் '39

30, செப்டம்பர்

ஒருவரிடம் இருக்கக்கூடிய எல்லா தன்மைகளையும் உற்றுக் கவனித்த பிறகே அம்மனிதன் குறித்த முடிவிற்கு நான் வருவேன். இதில் கால அவகாசம் குறித்த கேள்வி மட்டும் தான் உள்ளது. இதில் எப்பொழுதும் இடைமுறிவுக்கான உணர்வு எனக்கு வந்து விடும். விசேஷம் என்னவென்றால், அந்த மனிதன் எது குறித்தோ தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் தடைபட்டு நிற்பதாக நான் உணரும் தருணத்தில் முறிவு நிகழ்ந்துவிடுகிறது

4 , அக்டோபர்

சில நாட்களுக்கு முன்பு வரை என்னிடம், வாழ்க்கையில் ஏதேனும் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் மேலோங்கி நின்றது.

படிப்பகம்

padippakam

இதற்குக் காரணம் என்னுடைய வறுமை, அதன் கொடூர அனுபவம், தனிமை. இவையெல்லாம் ஏதேனும் ஒரு வேலைக்குச் செல்ல என்னை உந்தித்தள்ளியது. இது தவறான எண்ணமில்லை என றாலும் ஏதோ ஒன்று உள்ளுக்குள் அரித்தது. Bel - Abbe's-ல் வேலை கிடைத்தவுடன் மகிழ்ந்தேன். அதன் நிரந்தரத்தன்மை என்னை சலனப்படுத்தியது. இதனால் பழைய எண்ணங்கள் சிதறின. வேலையை உதறிவிடலாம் என்று தீர்மானித்தேன். ஏனெனில், பாதுகாப்பான வேலை என்பது வாழ்க்கையில் கிடைக் கும் வாய்ப்புகளை ஒப்பிடும் போது முக்கியத்துவம் அற்றதாகக் கருதினேன். ஒரே விதமான ஒழுங்கமைக்கப்பட்ட பாதுகாப்பான வேலை கொடுக்கும் ஸ்திரத்தன்மையில் உள்ளம் ஒழுங்கற்ற சோம்பலை நாடியது சில நாட்களுக்கு என்றால் சமாளிக்கலாம். வாழ்வே அதுதான் என்றால், எனவே என்னை நானே சுருக்கிக் கொண்டுவிட்டேன். நிரந்தரமாக தனிமைப்பட்டுக் கிடக்க நான் தயாரில்லை. இது என் பலமா, பலவீனமா என்பது குறித்து எனக்கு தெரியவில்லை. எல்லோரும் என்னிடம் அரிய வாய்ப்பை நழுவ விட்டாய் என திட்டித் தீர்த்தனர். எனக்குத் தெரியும் இது முரண் பாடல்ல. நிலைத்து நிற்பதென்பது வேறு நிலையாய் இருத்தல் என்பது வேறு என்னை வேலையிலிருந்து ஓடும்படி செய்தது சந்தே கத்துக்கு இடமின்றி எதுவென்றால், நிரந்தரமாக ஒட்டிக் கொண்டு விடுவது குறித்த பயம்கூட அதிக காரணமில்லை. ஆனால் ஏதோ ஒரு அசிங்கத்தின் மீது நிரந்தரமாக ஒட்டிக் கொள்ள நேர்ந்து விடுமோ என்ற எண்ணம்தான்.

○

10 அக்டோபர்

ஏதோ ஒன்றில் மதிப்பாக இருப்பது அல்லது இல்லாமலிருப்பது படைப்பது அல்லது படைக்காமல் இருப்பது. முதல் விஷயத்தில் அனைத்தும் நிருபிக்கப்பட்டவைகள் ; எவ்வித விதிவிலக்குமின்றி அனைத்தும். இரண்டாவதில் முழுமையான முட்டாள் தனமே. பிறகு தெரிவு செய்ய இருக்கும் ஒரே ஒரு வாய்ப்பு, அழகுணர்வு மிகுந்த திருப்திப்படுத்தும் வடிவான தற்கொலைதான் : திருமணம் மற்றும் 40 மணிநேர வாரம் ; அல்லது ஒரு கைத்துப்பாக்கி.

○

பிப்ரவரி 1938

புரட்சிக்கான ஆன்ம வேகம் முழுவதும், மனித நிலைகளை எதிர்க்கக்கூடிய மனித செயல்பாட்டில் தங்கியிருக்கிறது. பல்வேறு.

படிப்பகம்

padippakam

வடிவங்களில் இது பரிமளிக்கிறது. இதில் ஆத்மார்த்தமாக சேர்ந்துள்ள வடிவங்களே கலையும், மதமும். புரட்சி எப்பொழுதும் கடவுளுக்கு எதிராகவே நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆன்ம வேகத்தை வரலாற்று சான்றுகளிலிருந்து அறியலாம். இதற்கு மால்ராக்ஸ் (Malraux's)-ன் உணர்வு தேவை. இந்த உணர்வும் விருப்பத்தை தீர்மானிக்கும் அளவிற்கு இருத்தல் கூடாது இதனை எளிதாக அதன் சாரத்திலிருந்தும், குறிக்கோளிலிருந்தும் கண்டுபிடித்துவிட முடியும். இக்குறிப்பிட்ட பார்வையின் அடிப்படையில் மகிழ்ச்சியின் வெற்றியை மறுபதிப்பு செய்யக்கூடிய எந்தக் கலைப்படைப்பும் புரட்சிகரமானது.

○

ஏப்ரல் 1938/நாற்பது மணிநேர வாரம் குறித்த கட்டுரை

என் குடும்பத்தில் — பத்து மணி நேர வேலை, பின் தூக்கம். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை – வேலையின்மை : அழுகின்ற மனிதன். அவனுடைய மிகப்பெரிய துக்கம் என்னவென்றால் தன்னை தலைகுனியச் செய்த ஒன்றிற்காக ஒரே சமயத்தில் வாழ்த்தவும், அழவும் செய்ய வேண்டி அவன் இருப்பதே.

வேலையின் மதிப்பைப் பற்றியும் அதன் தேவை குறித்தும் இன்று மக்கள் அதிகம் பேசுகிறார்கள். குறிப்பாக மான்ஸியர் கிக்னோஸ் இது குறித்த முடிவான கருத்துக்களை வைத்துள்ளார்.

இது பித்தலாட்டத்தனமானது. இலகுவாக ஏற்றுக்கொள்ளப் படும் போதுதான் வேலைக்கு மதிப்பு ஏற்படுகிறது ஏதும் செய்யாதிருப்பதில்தான் ஒழுக்க மதிப்புகள் இருக்கிறது ஏனென்றால் இது மனிதர்களை எடை போடுவதற்கான ஒரு நிலையைக் கொடுக்கிறது. இது மரணத்திற்கு ஏதுவானது, இரண்டாவதாகத்தான். ஆனால் வேலை என்பது எல்லோரையும் ஒரே தரத்திற்குக் கொண்டுவந்து விடுகிறது மனிதர்களை எடை போடுவதற்கான எந்த ஒரு அடிப் படையையும் இது கொடுப்பதில்லை. அடிமைத்தனமா வடிவத் திற்குள் எந்த ஒரு சிறந்த மனிதனாலும் தன்னுடைய திறமைகளை வெளிப்படுத்த இயலாது.

வேலை என்பதற்கு மிகவும் மேலெழுந்தவாரியாகவே நாம் பொருள் கொண்டுள்ளோம். வேலையை சோம்பேறித்தனத்திற்கு கிடைத்த பரிசாக நினைக்கிறோம். 'வேலையின் மதிப்பு என்பது, ஞாயிற்றுக்கிழமைகளில் ஒருவன் தனக்காக செய்து கொள்ளக்கூடிய

படிப்பகம்

padippakam

சிறிய செயல்களிலும் அடங்கியுள்ளது. இங்கு வேலையும் விளையாட்டும் மீண்டும் இணையும்; மேலும் விளையாட்டு சுதந்திரமான போக்குடன் தொழில் நுட்ப அறிவோடு சேரும் போது 'வேலைக்கு' மதிப்பும் கலைக்கு மதிப்பும் மேலும் படைப்பிற்கும் மதிப்பு ஏற்படுகிறது

○

இன்று பரிந்துரைக்கப்படுகிற அல்லது அனுமதிக்கப்படுகிற ஒரே ஒரு சகோதரத்தன்மையான நேசம் என்பது யுத்தகளத்தின் மரணமுகமான, கீழ்த்தரமான, ஒன்றாக இருக்கிறது.

○

கலைஞனும் கலையின் பங்களிப்பும்

மிகக்குறைவாக சொல்வது ஏதுவோ அதுவே உண்மையான கலைப்படைப்பு. படைப்பாளியின் உலகளாவிய அனுபவத்திற்கும், அவனுடைய எண்ணம் + அவனுடைய வாழ்க்கை (அவனுடைய வாழ்க்கைமுறை - ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் இந்த வார்த்தை குறிக்கக்கூடிய ஒழுங்கு முறைகளிலிருந்து விடுபட்ட வாழ்க்கை) ஆகியவற்றிற்கும் குறிப்பிடத்தக்க தொடர்பு உள்ளது. அவனுடைய படைப்பு இந்த அனுபவத்தை வெளிப்படுத்தும். ஒரு படைப்பு இந்த அனுபவத்தின் மொத்தத்தையும் இலக்கிய அலங்காரங்களால் சூழப்பட்டு வெளிப்படுத்துமேயானால் மேற்குறிப்பிட்ட உறவு தவறானதாகிவிடும். வெட்டியெடுக்கப்பட்டு பட்டை தீட்டப்பட்ட வைரக்கல்லானது எவ்வாறு தன்னுடைய உள்ளார்ந்த ஒளியை எதிரொளிக்க செய்து அதே நேரம் முழுமையாக வெளியேற்றிவிடாத தன்மையோடு விளங்குமோ அதே போல் மொத்த அனுபவத்தின் வெட்டியெடுக்கப்பட்ட ஒரு பகுதியாக கலைப்படைப்பு இருக்க வேண்டும். இதுதான் சரியான ஒன்றாகும். முதல் விஷயத்தில், மிகைப்படுத்தலும், இலக்கியமும் இருக்கிறது. இரண்டாவது, இனிமையான படைப்பாக அமைந்துவிடுகிறது. ஏனென்றால் முழுமையான அனுபவத்தின் சாரம் நேரடியாக வெளிப்படுத்தப்படுவதில்லை.

பிரச்சினை என்னவென்றால், வாழ்க்கை குறித்த அறிவைப் பெறுவது (வாழ்ந்து பார்ப்பதற்குப் பதிலாக) என்பது எழுதுவதற்கான குறைந்தபட்ச திறனுக்கும் அப்பால் இருக்கிறது. எனவே, இறுதி ஆய்வில் மாபெரும் கலைஞன் என்பவன் முதல் மற்றும் முதன்மையான மனிதன் - மிகப் பெரிய அளவில் வாழ்ந்தவன்

படிப்பகம்

padippakam

அனுபவத்திற்கும், அது குறித்த நமது எதிர்பார்ப்பிற்கும் இடையிலான, நுட்பமான உறவுதான் உண்மையில் வாழ்வது என்பதாகும்.)

மரணமும் எழுத்தாளனின் படைப்பும்.

மரணத்திற்கு சற்று முன்னர் அவனுடைய இறுதி படைப்பு, அவனிடம் வாசித்துக்காட்டப்படுகிறது. தான் சொல்ல வேண்டியதை இன்னும் சொல்லியிருக்கவில்லை' அந்தப் படைப்பினை எரித்துவிட கட்டளையிடுகிறான். அறுபட்ட வீணையின் தந்திக் கம்பியினைப் போல எதுவொன்றோ தன் இதயத்தில் துண்டிக்கப்பட்ட ஒலியுடன் எது ஒன்றாலும் திருப்தியுராத அந்தப் படைப்பாளி இறந்து போகிறான்.

சூரியன் மற்றும் கடலின் மகிழ்வானது, பெண்களின் முகம்- கொலை செய்யப்பட்டுக்கொண்டிருப்பது இதுதான். நாம்கொலையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதனை மறுக்க வேண்டும். நாம் மிகச் சரியாக முரண்பாடுகளின் மத்தியில் வாழ்கிறோம். துயரத்தைக் குறைக்கும் ஒரு துளி கண்ணீர் கூட இல்லாமல், நம் இந்த நூற்றாண்டின் மொத்தமும் வளைத்து கொடுக்காமலும், இந்த முரண்பாட்டின் கழுத்துப்பிடியிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

தீர்வு எதுவுமில்லை என்பது மட்டுமல்ல, எந்தப் பிரச்சினைகளுமே அங்கு இல்லை.

III. ஏப்ரல் 1939 – பிப்ரவரி 1942.

ஆகஸ்ட்

நேசத்துடன் வாழ்வதற்காக சிலர் படைக்கப்பட்டுள்ளனர். சிலரோ நேசிக்கமட்டுமே படைக்கப்பட்டுள்ளனர்.

தனிமையில் இருந்து எவ்வளவு அறிகிறோம் என்பதை உணர்ந்தால் தனிமை குறித்து அதிகம் எழுதமாட்டோம்.

நான் ஒரு மணம் மிக்கவன். எந்த கலையாலும் என்னை வெளிகொண்டுவர முடியாது. ஏனெனில் வாழ்வை மட்டுமே கொண்டுவரமுடியும் (மணத்தை கொண்டுவர இயலாது,)

படிப்பகம்

padippakam

நாம் எந்த இடத்தில் வாழ்கின்றோமோ அங்கேயே நன்றாக வாழலாம்.

வேலையை முழுமையாக செய்ய விடாமல் தடை செய்வது வேலையே

நமது பயணத்திற்கு தடையாய் உள்ளது எதுவோ, அதுவே நம்மை அதில் பயணப்படுத்தவும் செய்யும்.

பாரிஸ் 1940

ஆகஸ்ட்

- பாரீஸில் எது வெறுக்கத்தக்கது - இளகிய மனம், மறைமுக இனிய உணர்வுகள், இதனுள் எல்லாமே அழகோடு, அழகின் ரகசியமாய், தளிர் தன்மையுடன் அந்தகாரமான வானம், மின்னிடும் வீட்டின் கூரை மற்றும் விடாது பெய்யும் மழை,

- பாரீஸில் எது ஊக்கமளிப்பதாக உள்ளது - மிகப் பயங்கரமான தனிமை, சமூக வாழ்விற்கு ஒரு தீர்வாக நான் பெரிய நகரங்களையே கூறுவேன், தற்பொழுது நமது மனம்தான் வெறுப்பின் விளிம்பில் - இங்கு உடம்பு தனது மதிப்பை இழப்பது - இவை மூடி மறைக்கப்படுகிறது. ஒழுங்கற்ற தோலின் மேலாக, இதில் விடுபடுவது ஆன்மாமட்டுமே ஆல்காஹால் மழையில் நனைந்து அதன் ஓலங்கள் எங்கெங்கிலும் மோதும் அவலநிலை - ஆனாலும் ஆன்மாமட்டுமே தன் தன்மையோடு விலகிநிற்கிறது

- பாரீஸின் சாம்பல் நிற மேகத்திற்கு கறுப்புநிற மரங்கள் துணையுடன் சாம்பல் வண்ண புறாக்கள் அதனோடு இணைய புல்வெளிகளின் ராகம் புறாக்களின் ஆன்மாவை உலுக்க இனிய ராகங்களுக்கு சுருதி சேர்ப்பதாய் இறக்கைகளின் படபடப்பின் விளைவில் புல்வெளிகளின் சோககீதம் மாறி அப்புறாவைப் போல இதமாக ஒலி எழுப்பி அன்பை பரிமாறும் அற்புதமும் இங்குண்டு.

IV. சனவரி 42 - ஜூலை 1945

- பொதுவான மனோநிலை - நாம் ஒருவருடன் எவ்வாறு உறவு கொண்டுள்ளோம் எனில் அவரை குறித்து நல்ல விசயங்களை மட்டும் பேசுகின்றோம் அவரின் தவறுகளை கவனமாக ஒதுக்கி

படிப்பகம்

padippakam

விடுகின்றோம், முரண்பாடுகளை களைய இவ்வாறு உதவு கின்றோம் ஒவ்வொருவருக்கும் நல்ல மதிப்பும். நல்லவிசயங்கள் மட்டும் பிடிக்கும், அரசியல் தத்துவம். கல்வி வரலாறு எதுவா னாலும் இவ்வகையில் தான் வளர்க்க முடியும். தற்பொழுது நாம் 20-ம் நூற்றாண்டில் கிறிஸ்துவ கற்பனையின் பிரதிநிதி யாக இருந்துள்ளோம். ஆனால் 2000 வருடங்களாக மனிதன் இழிவு அடைந்திருந்தான் என்பது மிகையாகாது. யாரால் சொல்லமுடியும் 2000வருடத்தில் எப்படி இருந்தோம் என்பதை .. என் பிரபஞ்சத்தின் ரகசியம் - ரகசியம்-கடவுள் குறித்த கனவு மனிதனின் மரணமில்லாத தன்மையை விடுத்து நினைத்து பார்ப்பதில் உள்ளது.

அக்டோபர்

- பாலுணர்வு நம்மை வெறுமைக்கு இட்டுச் செல்லும், இதில் ஒழுக்கமின்மை என்பது இல்லை. மாறாக பலனளிக்காத ஒன்று நீங்கள் விரும்பும்வரை ஈடுபடலாம், உற்பத்தி என்பது மட்டும் இல்லாமல் இருக்கும் வரையில். ஆனால் பாலியல் ஒழுக்கம் ஒருவனின் முன்னேற்றத்துடன் சம்பந்தப்பட்டது.

- ஒருகாலத்தில் பாலுணர்வு வெற்றிபெறும், எப்பொழுது எனில் ஒழுக்கங்களிலிருந்து நம்மை விடுவிடுத்துக் கொள்ளும்பொழுது ஆனால் அது உடனடி தோல்வியில் கொண்டு சேர்க்கும், உண்மையான வெற்றி கிடைக்க வேண்டுமெனில் பாலியல் ஒழுக்கத்தில் நாம் நிலைத்தல் வேண்டும்.

நவம்பர்

காப்காவின் (Kafka) திறமை எதில் பொதிந்துள்ளது எனில் மீண்டும் மீண்டும் படிக்க வைப்பதில், அவரின் படைப்புகளில் முடிவில் அல்லது முடிவது போன்ற நிலையில், உற்று நோக்கினால் முற்றிலும் வேறு புதிய கோணத்திலிருந்து அணுக நம்மை தூண்டும், சில சமயங்களில் மூன்று நான்கு கோணங்களில் பார்க்கும் பொழுது அவரின் படைப்புகளை மீண்டும் நாம் மூன்று நான்கு தடவைகள் படிக்க நேரிடும். ஆனால் ஏதாவது ஒரு கோணங்களை வைத்துக் கொண்டு அவரை வரையறுத்துவிடமுடியாது. ஒரு மொழிபெயர்ப்பா ளரால் கூட அவரின் எண்ண அலைகளை சரியாக மொழிபெயர்க்க

படிப்பகம்

padippakam

இயலாது, வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்கும் அர்த்தத்தில் அல்ல. ஒரு புள்ளியில் துவங்கி பல கோணங்களை (Direction) எட்டுவது அல்லது பல புள்ளியிலிருந்து ஒரு கோணத்திற்கு வருவது எல்லாம் படைப்பாளியின் மனநிலையினுள் உறைவது.

○ தத்துவ அறிஞர்கள் - பண்டைய காலத்தில், தாங்கள் படித்ததைவிட அதிகம் சிந்தித்தார்கள், எனவே உண்மையின் அருகில் அவர்களால் எளிதாக வர முடிந்தது. அச்சுக்கலை இப்போக்கையே மாற்றிவிட்டது. மக்கள் நிறைய படிக்க ஆரம்பித்தனர் விளைவு சிந்திப்பது பாதித்தது, தற்பொழுது நம்மிடம் இருப்பவை தத்துவமில்லை வெறும் வர்ணனைமட்டுமே. ஒரு சிந்தனையாளன் புத்தகத்தை எழுதும் போது "நாம் முதலிலிருந்து சிந்திக்க தொடங்கினால்.." என்று எழுதும் போது சிரிப்பு வருகிறது. இன்று நிலவும் தத்துவங்கள் இலக்கிய தரத்தையோ, மேற்கோள்களையோ அதிகாரப்பூர்வமான விசய தாரங்களை கணக்கில் எடுத்துக்கொள்ளப் படாமலேயே படைக்கப்படுகிறது.

20 மே

முதன் முதலில் என்னுள் ஒரு இனம் புரியாத உணர்வு. குறுகுறுப்பு, திருப்தி முழுமையான திருப்தி, என்னுள்ளேயே கேள்விகள் எழுப்புகிறேன். புல்வெளியில் படுத்துக்கொண்டு மிதமான மாலை மஞ்சள் வெயிலை அனுபவித்துக்கொண்டு இதுவே எனது வாழ்வின் கடைசி நாளாக ... பதில் — என்னுள் அமைதியான சிரிப்பு. எதைப்பற்றியும் பெருமை பட்டுக்கொள்ளாத, எதைப்பற்றியும் முடிவு எடுக்க இயலாத என் நிலையை நான் புரிந்துகொள்ள முடியாத இந்நிலை - ஒரு அனுபவத்தின் முதலில் இறுக்கம் அடைகின்றேனா? அல்லது இந்த இனிய மாலைப் பொழுதின் பாதிப்பா, விவேகத்தின் வெளிப்பாடா?

ஜூன், லக்ஸம்பர்க்

○ சூரியனும் காற்றும் முழுதும் நிரம்பிய ஒரு ஞாயிறு காலை நீண்டு வளர்ந்த மரங்களின் நிழலில் இரண்டு வாலிபர்களின் உரையாடல் மனித கௌரவங்களின் நம்பிக்கை குறித்து முகவுரை

அன்பு
அறிவு
இரண்டும் ஒன்றுதான்

படிப்பகம்

padippakam

☐ உண்மையான காதல் திருமணத்தில் முடியும். அன்பு பொய்மை இல்லாத தூய அன்பு மட்டும்.

☐ கலையின் இயற்கை தன்மை குறித்து முற்றிலும் சரியான வடிவங்களில் வெளிப்படுத்துவது முடியாத காரியம் ஏன்னெனில் உண்மையை வெளிப்படுத்துவதில்லை மட்டமான ரசனை, வக்கிரம் மனிதனை அதன் ஆழமான எதிர்ப்புகளில் திருப்திபடுத்தமுடியாது. எனவே தான் மனிதபடைப்புகள் இவ்வுலகையே எதிர்க்க துணிந்து விட்டது. தொடர்கதைகள் மட்டமானவை, உண்மையின் விளிம்பை, நிலையை அறிந்து கொண்டதால், உலக மரபுகளை ஒத்திருப்பதால் கலையும் கலைஞனும் இவ்வுலகை உருவாக்குவார்கள் ஒரு வித மறைமுக எதிர்ப்புடன்.

30 ஜுலை 1945

☐ முப்பது வயதில் தன்னைப்பற்றி அறிந்திருத்தல் அவசியம் தன் உள்ளங்கை போல, தோல்விகளின் எண்ணிக்கையும் அவனின் தன்மைகளையும். எவ்வளவு தூரம் அவைகளை கடந்து செல்வது என்பதை அறிந்திருக்க வேண்டும். தோல்விகளை முன்கூட்டியே அறிவது - என்ன தன்மையுடன் மேலாக எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளும் மனப்போக்கு வேண்டும். ஆனால் சம்பவங்கள் எல்லாம் உண்மையானவை, எல்லாவற்றையும் செய்து பார்ப்பதும், வழங்கு வதும் தினசரி வாழ்வில் தீர்க்கப்படுபவை. ஆனால் முகமூடியுடன் செயல்படுவதால் ஏறத்தாழ எல்லாவற்றையும் வழங்குமளவிற்கு எனக்கு அனுபவம் கிடைத்துவிட்டது. என்றாலும் திரும்பவும் பெரிய அளவுகளில் முயற்சி தேவை. ரகசியமாக முயன்று கொண்டிருக் கிறேன். இவைகளில் நம்பிக்கையுடனும் நம்பிக்கையற்றும், முனைப் புடன் முயற்சியில் எதையும் புறந்தள்ளாதே - ஏனெனில் ஒவ்வொன் றும் ஒருவகையில் மதிப்புமிக்கவை.

V. செப்டம்பர் 1945 - ஏப்ரல் 1948

நவம்பர் - 32 வயதில்

மனிதனின் இயற்கையான நெளிவுத் தன்மை, தன்மையும் தன்னுள் இருப்பவனையும் அழிப்பதில் வெற்றியடையும், சாதாரண தன்மைக்கு மிகுந்த பிரயாசை பட வேண்டும், அதைவிட அவனின் குறிக்கோளை எட்டுவதற்கு அதிக முயற்சி தேவை. மனிதன்

படிப்பகம்

padippakam

அவனுக்குள்ளும் ஒன்றுமில்லாதவன், அந்த நிலைக்கு அவனே பொறுப்பாவான். ஆனாலும் அவனுடைய வாய்ப்புகள் கணக்கிலடங்காதவை. மனிதனின் இயல்பே அவனை அடிக்கடி மூழ்கடித்துக் கொள்வதில் அமைந்துள்ளது. தன்னம்பிக்கை, விடாமுயற்சி வளர்ச்சிக்கு எப்பொழுதும் வாய்ப்பளித்துக் கொண்டிருக்கிறது. கடந்த ஐந்து வருடங்களாக இவைகளை நான் பரிசீலித்து வருகின்றேன். மனித மிருகங்களில் இருந்து தியாகிகள் வரை பேய்களிலிருந்து நம்பிக்கையற்ற பலியிடுதல்வரை ஒவ்வொரு நிகழ்வுகளிலும் இது ஒளிந்துள்ளது. ஒவ்வொருவருக்கும் இவ்வாய்ப்பு கிடைத்துக் கொண்டு தான் இருக்கும். மனித நெறிகளை, வரையறைகளை, அவனின் முயற்சிகளை ஆராயும்பொழுது கடவுள் என்ற பிரச்சனையை கவனத்தில் எடுக்காமல் இருத்தல் முடியாது. இதற்கெல்லாம் ஒரு வரையறை தேவையெனில் நாம் முதலில் நம்மை ஆளத்தெரிந்திருத்தல் அவசியம்,

☐ ஹெகலியத்தின் (Hegelianism) அடிப்படை தவறுகளை இருத்தலியல் தன்னுள் வைத்துள்ளது. அதாவது மனிதனை ஒரு வரலாற்றுச்சான்றாக குறைமதிப்பீட்டில் வைத்துள்ளது. ஆனாலும் இதன் தொடர்புகளின் மதிப்புகளை அது கவனிக்க தவறிவிட்டது. அவனின் சுதந்திரத்தை மறுத்துவிட்டது.

Panelier 17 ஜுன் 1947

☐ உன்னதமான தினம் இன்று. இளங்காலை சூரிய வெளிச்சம் கடற்கரை ஒட்டிய மரங்களின் மீது புகைபோல் அமிழ்ந்து ஒவ்வொரு மரக்கிளையிலும் மெதுவாக நகர்ந்து வழிந்தோடிக் கொண்டிருக்கிறது. இலைகளின் அடர்த்தி, அதன் அசைவு ஆயிரக்கணக்கான உதடுகள் காற்றை உறிஞ்சும் நிகழ்வை ஞாபகப்படுத்த ஆயிரக் கணக்கான சிறிய ஊற்றுகள் வானத்திற்கு நீர்பர்ய்ச்ச முனைய, அதனூடே காலை வெயிலின் சிதறிடிக்கப்பட்ட ஊதா பழுப்பு வண்ணம் மீண்டும் - இதுபோதும்.

ஏப்ரல் 1948 — மார்ச் 1951

☐ நாவலின் முடிவு - "மனிதன் மதவெறிபிடித்த விலங்கு', என அவன் சொன்னான், உடனே பேய்மழை இப்பூமியை நனைத்தது

படிப்பகம்

padippakam

- படைப்புகள் சரி செய்யப்படுகிறது- அந்த மதத்திற்கு அவன் ஒருவனே பிரதிநிதி - பழையவனும் அவனே - அவன் எல்லா இடங்களிலும் வேட்டையாடப்படுகின்றான்.

- என்னின் எல்லா சக்திகளையும் குவித்து-என்னின் பலவீனத்தை கண்டறிந்து, ஒழுக்கமான மனிதன் ஆக முயன்றேன். ஒழுக்கம் என்னை கொன்றது.

- நரகம் என்பது விசேசமான சலுகை. யாருக்கு அது அதிக தேவையோ அவர்கட்கு மட்டுமானது.

- நாம் பெய்லி(Beyle)யின் சொற்களை வைத்து மனிதனை மதிப் பிடுகின்றோம் எவ்வாறு ஏனில் அவர் சொல்லியதையும், எழுதியதையும் தவிர்த்து, நான் சொல்கின்றேன் அவர் செய்த தையும் தவிர்த்துதான்.

- நற்பெயரை அவ்வளவு எளிதாக தக்கவைத்துகொள்ள இயலாது கெட்ட பெயரை எளிதாக தக்கவைத்துக் கொள்ளமுடியும் நல்ல பெயருடன் உலவுவது கடினம். ஏதாவது சிறிய தவறு அதள பாதாளத்தில் தள்ளி விட்டுவிடும். கெட்ட பெயருடன் சலுகைகள் உங்களைத் தேடி ஓடிவரும்.

- ஓவியம் சிறிய திரைசீலையின் பின் அவள், அழகிய கண்கள் அமைதி தவழும் முகம். பால்காரியின் வெண்மை புன்னகை. திடீரென்று பேச ஆரம்பித்தாள், வாய் அஷ்ட கோணலாகி முகம் விகாரமாகி, அவளின் அழகு கரைந்து போனது. அவள் ஒரு சமூகப் பெண்.

- அவனிடம் நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள், அவனும் பதில் அளிக்கின்றான். தொடர்ந்து கொண்டே - ஆனால் அவன் கண்கள் எங்கேயோ எதையோ அலைந்து கொண்டு - அவன் பெண்பித்தன்,

- அன்பு என்பது அநீதியானது போதுமானதல்ல.

- மனிதனின் ஒரு பகுதி அன்பை மறுக்கும், இதுதான் இறக்க விரும்புவது, ஆனால் அது மன்னிக்கப்பட வேண்டிய பகுதி.

- எனது அனைத்து வேலைகளுமே எதிர்மறையானது.

- கஷ்டமானது ஒன்றுமில்லை செய்ய முடியாதவையே இருக் கின்றன.

படிப்பகம்

padippakam

○ பவுல்னர் (Faulkner) புதிய தலைமுறை எழுத்தாளர்கள் குறித்து தங்களின் கருத்து? என்ற கேள்விக்கு அவரின் பதில்: புதிதாக எதையும் எழுத முடியாது, பிரயோசனமாக விட்டுச்செல்லவும் இயலாது எழுதும்முன்பு அடிப்படை உண்மைகள் அவனுள் வேர்விட்டு உங்களை அதனை நோக்கி செயல்பட அனுமதிக்க வேண்டும். பெருமை, அவலம், மதிப்பு இவைகளைப் பற்றி நன்கு பேசத் தெரியாத, இவைகளுடன் எத்தொடர்பும் அற்ற எழுத்தாளர்கள், அவர்களின் படைப்புகள் அவர்கள் கண்முன்னே அழிந்து போகும். (Goethe)கெதெ,(Shakespeare) ஷேக்ஸ்பியர் இருவரும் நிலைத்து நிற்கிறார்கள், ஏனெனில் அவர்கள் மனித இதயத்தை நம்பியவர்கள். (Balzac) பால்ஸாக், (Flaubert) பால்பார்ட் போன்றவர்களும் இவை போன்று நிலைத்து நின்றவர்கள்.

○ இன்றைய இலக்கியத்தில் (NIHILSM) நம்பிக்கையின்மை நுழைந்துள்ளது குறித்து?
பயம் தான். ஒரு நாள் பயப்படுவதை மனிதன் நிறுத்துவான் அன்று மீண்டும் தன்னிகரற்ற படைப்புகள் வெளிவரும்-

○ ஒவ்வொரு சாதனையும் ஒரு அடிமை வேலைதான்,
அது நம்மை பல சாதனைகள் செய்வதற்கு உந்தும்,

ALBERT CAMUS
Selected Essays and Notebook
Philip Thody
ஆங்கிலம் வழி தமிழில்
சம்பத்

படிப்பகம்

padippakam

சைக்கிள்

சி. எம். முத்து

சைக்கிள் குப்பண்ணாச்சிக்கு ஒரு பெரிய மாற்றத்தையே உண்டு பண்ணி வைத்திருந்தது. எப்போதும் அந்த சைக்கிளின் பளப்பளப்பைப் போலவே அவரும் வெள்ளை சள்ளை உடுத்தி அதிக பளப்பளப்போடு இருப்பார். எப்போது பார்த்தாலும் அவர் முகத்தில் ஒரு பெரிய சந்தோஷம் தேங்கி கிடக்கிற உண்மை பளிரென்று தெரியும்.

சரவணனின் கனவு சைக்கிளாய் நின்று கொண்டிருந்தது கூடத்தில்.

நேற்றைக்குத்தான் 'அம்பிகா சைக்கிள் மார்ட்'டிலிருந்து இந்த சைக்கிளை வாங்கி வந்திருந்தான் இவன் சைக்கிள் என்பது ஒரு சாதாரண விஷயமாக பலருக்குத் தோன்றலாம். சரவணனைப் பொறுத்தவரை அது இவனின் பத்து வருஷத்திய கனவு என்பது நிஜத்திலும் நிஜம்.

பத்து வருஷத்துக்கு முந்தி இப்படி ஒரு சைக்கிளை வாங்கிவிட வேண்டுமென்று இவன் ஒரு கற்பனையே பண்ணி வைத்திருந்தான். அந்த கற்பனை இவனுள் ஒரு கனவாய் விரிந்து விரிந்து பத்து வருஷகாலம் கனவாகவே இருந்தது நேற்றைக்குத்தான் சாத்திய மாகிப் போயிருக்கிறது.

எல்லை காணமுடியாத மகிழ்ச்சி இவன் உள்ளத்தில். பொங்கிப் புரண்டு கொண்டிருந்தது சைக்கிளைப் பார்க்கிற போதெல்லாம் சரவணனுக்கு புதுமனைவியை ஆசை ஆசையாகத் தொட்டுத்

படிப்பகம்

padippakam

தொட்டு சுகம் காணுவதுபோல சைக்கிளின் ஒவ்வொரு பகுதியையும் தொட்டுப்பார்த்தும் தடவிப்பார்த்தும் சுகம் கண்டுகொண்டிருந்தான் இவன் அதற்கு முத்தம் கொடுக்காததுதான் பாக்கி. கொடுக்கலாம் என்றால் அதையும் செய்திருப்பான் இவன். சைக்கிள் இவனது வாடகை வீட்டுக்கு ஒரு அழகை தருவதைப்போல வெகு ரம்மியமாய் நின்று கொண்டிருந்தது கூடத்தில்.

பத்து வருஷத்துக்கும் முன்னால் இவனுக்கு சைக்கிள் பற்றிய கனவெதுவும் வந்ததே இல்லை. இன்னும் சொல்லப்போனால் சைக்கிள் என்கிற விஷயமே இவனுக்கு ஒரு அலர்ஜியாய் இருந்து போயிருந்தது. அந்த அலர்ஜியினால்தான் இவன் தனது இருப தாவது வயதுவரை சைக்கிள்விட கற்று கொள்ளாமலேயே இருந்தது கூட. இவன் சின்ன வயசாயிருக்கும் போது இவனது அம்மாவும் சரி அப்பாவும் சரி இணைபிரியாத நண்பர்களும் சரி, ஒரு ஆத்திரம் அவசரத்திற்கு ஆகும் சைக்கிளை கற்றுக்கொள்' என்று இவனிடம் எவ்வளவு வற்புறுத்தியும் எச்சரித்தும்கூட இவன் வலுக்கட்டாய மாகவே சைக்கிள் கற்றுக் கொள்வதை தவிர்த்து வைத்திருந்தான். ஏன் எதற்கு? என்று இவனது சைக்கிள் கற்றுக் கொள்வது குறித் ததான பலரது கேள்விகளுக்கு இவனால் சரியான காரணத்தை சொல்லமுடியாமல் போனது. அது இவனுடைய ஒருவிதமான பல வீனமும் வெட்கமும் என்றுகூடச் சொல்லலாம்.

அந்தக் காரணங்கள் என்னவாக இருக்கும் என்று இவனே ஆராய்ந்து பார்த்தபோது கேலிக்குரியதாகவும் கேலிக்குரியில்லாத தாகவும் கூட சில உண்மைகள் இவனுக்குப் அப்போதெல்லாம் புலப் படும். அது இதுதான் - சைக்கிள் கற்றுக் கொள்கிறேன் சாமி என்று முழங்கால் முட்டிகளை உடைத்துக் கொண்ட ஆசாமிகளையும் உடம்பில் சிறாப்புகளை ஏற்படுத்திக்கொண்ட பையன்களையும் முகம் கை கால் என்று உடைத்துக் கொண்டுவரும் பலரையும் இவன் பார்த்திருந்ததன் விளைவாக அப்படி ஒரு பயம் சைக்கிள் கற்றுக் கொள்வதுபற்றி இவனுக்கு ஏற்பட்டு போயிருந்தது இன்னும் நகரச் சாலைகளில் அடிக்கடி நிகழும் சைக்கிள் விபத்துக்களும் அதனால் ஏற்படுகிற மரணங்களும்கூட இவனுள்ளிருந்த பயத்தை அதிகரிக்கச் செய்துவிட்டதின் நிமித்தம் இவன் சைக்கிளையே அலர்ஜியாக நினைக்கக் காரணமாக அமைத்து போயிருந்தது என்றுசொன்னால் அது வாஸ்வதம் என்று தரன் சொல்ல வேண்டும்.

இவனுக்குள்ளிருந்த சைக்கிள் பற்றிய பயத்தை இவனாகவே விரட்டியடித்துக் கொள்வதற்கான வழிவகைகளும் கூட சில விஷயங்

படிப்பகம்

padippakam

களால் இவனை தைரியமூட்டவும் செய்திருந்தன. நகரச்சாலைகளில் அநேக வாகனங்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் பறக்கும் சந்தடிகளிலும் எவ்விதமான பயமும் இன்றி இவன் வயசிலும் பத்துவயசு சிறார்கள் அனாயசமாக ஒரு கையை விட்டுக்கொண்டு சைக்கிள் ஓட்டுவதும் இரண்டு கைகளையும் விட்டுவிட்டு பேலன்ஸிலேயே சைக்கிள் ஓட்டுவதையும் நிறையவே பார்த்திருந்ததும் ? நகரச்சாலைகளில் எவ்வித பயமும் இன்றி பெண்பிள்ளைகள் சைக்கிள் விட்டுக்கொண்டு போகும் துணிச்சலும்தான் இவனுக்கு சைக்கிளின் மீது ஒரு மதிப்பும் பிரியமும் வந்திருந்ததோடு அதை கற்றுக் கொண்டே ஆகவேண்டும் என்ற வெறியையும் ஏற்படுத்தி விட்டிருந்தது. ஜனப்புழக்கம் அதிகமில்லாத இடங்களைத்தேடி நண்பர்களின் ஒத்தாசைகளோடு இவன் சைக்கிள் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான். இரண்டுநாள் பழக்கத்திலேயே இவனுக்கு சைக்கிள் ஓட்டுவது வெகு எளிதாகிப் போயிருந்தது. அன்றிலிருந்து ஒருநாள் விடாமல் ஒருமணி நேரமாவது வாடகை சைக்கிள் எடுத்து வேர்க்க விறுவிறுக்க மிதித்து எங்காவது சுற்றிவிட்டு வந்தால் தான் அன்றைய நாள் நிம்மதியாகக் கழிந்தது போலான சந்தோஷம் ஏற்படும் இவனுக்கு

தினசரி வாடகை சைக்கிள் எடுத்து விடுவதென்பது இவனது பொருளாதார நிலைமைக்கு ஒரு பெரிய இடைஞ்சலாய் இருந்ததால் எப்பாடுபட்டாவது ஒரு பழைய சைக்கிளாவது வாங்கிவிட வேண்டுமென்று இவன் நெஞ்சில் அப்போது ஆசை துளிர்விட்டது இவன் தனது ஆசையை அப்பாவிடம் தெரிவித்தபோது அவரால் நகைத்துக்கொள்ளத்தான் முடிந்தது. ஒரு பழைய சைக்கிள் சொந்தத்தில் வாங்கி வைத்துக்கொள்கிற நிலைமையிலா தனது குடும்ப வருமான இருக்கிறது என்பதை அவர் மட்டும்தானே உணர்ந்திருக்க முடியும்? பஞ்சுமில் ஒன்றில் கூலிவேலை செய்து ஒரு குடும்பத்துக்கு சோறு போடுவது மற்றைய அழிவு செலவுகளைப் பார்த்துக்கொள்வது ஒரு தகப்பனாருக்கு சாதாரணப்பட்ட விஷயமா? நித்தம்பொழுதை தள்ளு தள்ளு என்று தள்ளிக் கொண்டிருக்கும் அவருக்கு சரவணின் ஆசையை அவரது கடைசிகாலம் வரைக்கூட நிறைவேற்றி வைக்க முடியாமலேயே போய் விட்டது. இவனாலும் கூட தன் சம்பாத்தியத்தில் ஒரு பழைய சைக்கிளை வாங்கி வைத்துக் கொள்ள பல காலம் வரை முடியாமலேயே போய்விட்டது.

இவனது அப்பாவும் அம்மாவும் தன்கடைசி காலங்களை முடித்துகொண்ட பிற்பாடு குடும்பச்சுமையை இவன்தாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போதும்கூட 'ஒரு சைக்கிள் வாங்கிவிட வேண்டும்'

படிப்பகம்

padippakam

என்ற ஆசை தீரவில்லை. அது ஒரு பைத்தியம் போலவே இருந்தது இவனைப் பொறுத்தவரை.

இவனது எதிர்வீட்டு குப்பண்ணாச்சி இவனது சைக்கிள் கனவு விஸ்வரூபமெடுத்திருந்த சமயத்தில் வாங்கி வந்திருந்த புதுசைக்கிள் இவனுள் ஒரு பெரிய கிளர்ச்சியையும் பாதிப்பையும் ஏற்படுத்தி விட்டிருந்தது.

குப்பண்ணாக்சி அவர் வாங்கி வந்திருந்த சைக்கிளை ரொம்பப் பிரியமாக நேசித்துக் கொண்டிருந்தார். தினசரி அவர் வாங்கி வந்திருந்த சைக்கிளை கவனிப்பதென்பதை ஒரு வேலைபோலவே வைத்துக் கொண்டிருந்தார். நாளின் முக்கால்வாசிநேரம் அவரை அவரது புதுச் சைக்கிளோடேயே பார்க்க முடிந்தது. சைக்கிள் அவரையோ அவர் சைக்கிளையோ விட்டுப் பிரிய முடியாதது, அவரைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாததாகவே இருந்தது.

சைக்கிளோடு குப்பண்ணாச்சியைப் பார்க்கிற போதெல்லாம் இவனுக்கு பொறாமையாகவும் கவலையாகவும் இருக்கும். தான் அவர்மாதிரி ஒரு சைக்கிள் வாங்க முடியவில்லையே என்ற வருத்தத் தால் வந்த விளைவே அது.

சைக்கிள் குப்பண்ணாச்சிக்கு ஒரு பெரிய மாற்றத்தையே உண்டு பண்ணி வைத்திருந்தது. எப்போதும் அந்த சைக்கிளின் பளபளப்பை போலவே அவரும் வெள்ளை சள்ளை உடுத்தி அதிக பளபளப்போடு இருப்பார். எப்போது பார்த்தாலும் அவர் முகத்தில் ஒரு பெரிய சந்தோஷம் தேங்கிக் கிடக்கிற உண்மை பளீரென்று தெரியும். புதுச் சட்டையோ புதிய ஆபரணங்களோ அணிந்து கொண்டிருக்கிற போது உள்ளத்தில் வேறு எப்பேர்பட்ட கவலைகள் இருந்தாலும் கூட அதெல்லாம் மறந்துபோய் சுகம் ஒன்று ஏற்படுகிற மாதிரி புது சைக்கிள் அவருள் நிறையவே சந்தோஷத்தை அள்ளி தந்து கொண் டிருந்ததை சரவணன் உணர்ந்தது போலவே அந்தத் தெரு மனிதர் களும்கூட குப்பண்ணாச்சியைப்பற்றி நிறையவே உணர்ந்திருந் தார்கள்.

இவனது தெரு மனிதர்கள் குப்பண்ணாச்சியை அவர் சைக்கிள் வாங்கினதற்கும் பிற்பாடு நிறையவே நேசித்தார்கள் என்பதை சரவணன் நிறையவே உணர்ந்திருந்தான். புது சைக்கிள் சவாரி போகும் குப்பண்ணாச்சியைப் பார்த்து இவனுடைய தெருப்பெண்

படிப்பகம்

padippakam

கள் ஓரக்கண்ணால் பார்த்து ரஸித்ததை குப்பண்ணாச்சி சொல்லாமலேயே சரவணன் அறிந்தான். ஒரு புதிய பொருள் வாங்கும் போது சிலருக்கு அது பொறாமையாக இருந்தாலும் கூட பெரும் பாலோருக்கு அப்பொருள் வாங்கினவரின் மேல் அபரிமிதமான மதிப்பையே உருவாக்கி வைத்துவிடுகிறது. என்பதை இவன் உணர்ந்த போதுதான் எப்பாடுபட்டாவது ஒரு பழைய சைக்கிள் வாங்கிவிட வேண்டுமென்று கற்பனை பண்ணி வைத்திருந்தான். குப்பண்ணாச்சியைப் போலவே தன்னையும் ஜனங்கள் மதிக்க வேண்டும் என்பதாலோ என்னவோ.

இவன் அப்படி நினைக்க ஆரம்பித்திருந்த சமயத்தில் இவனுக்கு வயசு இருபத்தாறை தாண்டிப்போயிருந்தது, போதுமான வயசு வந்துவிட்டதினாலும் சமைத்துப்போட ஆள் இல்லை என்பதாலும் கல்யாணம் செய்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுப் போயிருந்தது. அதனால் சைக்கிள் பற்றிய ஆசையை கொஞ்ச நாளைக்கு தள்ளிவைத்துவிட்டு பெரிய சிரமங்களுக்கிடையே சொற்பமாக சிலவு பண்ணி ஒரு பெண்ணையும் பார்த்து திருமணம் செய்து கொண்டான்.

இவனது அப்பா உயிரோடிருந்தபோது பஞ்சு மில்லில் தினக் கூலியாக இருந்தவர் தினக்கூலியாகவே இருந்து செத்துப்போனார். அவரின் வேலை இவனுக்கு கைகொடுத்திருந்தது. இவன் வேலைக் குச் சேர்ந்திருந்து இரண்டு மூன்று வருஷம் கழித்து தான் இவன் நிரந்தர உத்தியோகஸ்தனனாக ஆனான். அதனால் இவனுக்கு சம்பளம் கொஞ்சம் கூடுதலாகக் கிடைத்தாலும்கூட குடும்பத்திற்கு அது போதுமானதாக இருக்கவில்லை. எதை எதைக் குறைத்து எத்தனை சிக்கனப்படுத்தி வாழ்ந்தாலும்கூட இவனது பொருளாதாரப் பிரச்சினை ஒரு சிக்கலாக இருந்தது. ஆனாலும் அந்த சைக்கிள் ஆசைமட்டும் இவனைவிட்டுப் போகவே இல்லை.

அந்தக் கனவு இவனுள் விஸ்வரூபமெடுத்திருந்த போது அதை எப்பாடுபட்டாவது வாங்கியே தீரவேண்டுமென்று வைராக்கியம் செய்து அதை வாங்குவது பற்றியதான வழிகளைத்தேடி பலரின் யோசனைக்கூட இவன் வேண்டி நின்றான். 'கம்பெனி லோன்' பற்றிதான் இவனுக்கு எல்லோரும் உபதேசம் செய்தார்கள் அப் போது.

கம்பெனி லோன் சாதாரணமாகவா கிடைத்தது. இவன் மில்லில் நிரந்தர உத்தியோகஸ்தனாக குறைந்த வருடங்களே பணியாற்றிக்

படிப்பகம்

padippakam

கொண்டிருந்ததால் இவனை நிறைபவே இழுக்கடித்தார்கள். மனசு அதற்காக வெறுத்துப் போனாலும்கூட சைக்கிள் கனவை வெறுக்க முடியவில்லை. லோனைப்பெற கடும் பிரயத்தனம் செய்தான் என்று தான் சொல்ல வேண்டும். மில் மானேஜர் இவனை அலையாய் அலைக்கழித்து சைக்கிள் வாங்குவதற்கான செக்கை இவன் 'கொட்டேஷன்' வாங்கிக்கொடுத்திருந்த 'அம்பிகா சைக்கிள் மார்ட்' டுக்கு கொடுத்தபோது இவன் அடைந்த மகிழ்ச்சியை சொல்லி முடியாது.

கம்பெனியில் கிடைத்த காசோலைக்குமேல் முந்நூறோ நானூறோ அதிகம் கொடுத்துதான் சரவணன் இந்த சைக்கிளை வாங்கியிருத்தான். பத்து வருஷங்களுக்கும் முன்னால் இப்படி ஒரு சைக்கிளை வாங்கிவிட வேண்டுமென்று இவன் கற்பனை பண்ண ஆரம்பித்திருந்தானே அப்போது இவன் வாங்கியிருந்த சைக்கிளின் மதிப்பு இவன் தொகை கொடுத்து வாங்கினதற்கும் பாதிக்கும்கீழ் தான் இருந்தது. இன்னும் ரெண்டொரு நாளில் பட்ஜெட் வருகிற தற்கும் அப்புறம் இந்த சைக்கிளின் விலை இப்போதைய விலையில் கால்மடங்கு ஏறப்போகிறது என்று கடை முதலாளி பயமுறுத் தினார் இவனுக்கு அந்த பயம் வரவில்லை, நல்லவேளையாக அதற்குமுன் லோன் கிடைத்து தான் வாங்கிவிட்டோமே என்று சந்தோஷப்பட்டான். "இனி ஒருமுறை நான் சைக்கிள் வாங்கப் போவதில்லை என் ஆயுசு உள்ள வரைக்கும் இந்த சைக்கிள் தான் எனக்கு. எவ்வளவு ஏறிப் போனாலும் வாங்குகிறவன் தானே சிரமப்படப் போகிறான்' என்று மனசுக்குள் நினைத்தபடி சும்மா யிருந்தான். அதை வாய்விட்டு சொன்னால் கேட்கிறவன் துப்பி விடு வானோ என்ற பயம் தான் காரணமோ என்னவோ.

'எஸ்ட்டா பிட்டிங் என்னன்ன வேணும்? என்று இவன் சைக்கிள் கோக்கும்போது கேட்ட கடைக்காரனின் கேள்வி இவனின் பொரு ளாதாரச் சிந்தனையை நினைக்க வைத்தது மட்டுமன்றி பத்து வருஷத்திற்கு முன்னால் குப்பண்ணாச்சி வாங்கிய புது சைக்கிளில் என்னென்ன அதிசயங்கள் இருந்தது என்று யோசனை செய்து பார்த்தான்.

குப்பண்ணாச்சியை ஒரு பரம ரஸிகர் என்றுதான் அப்போது அவரைப்பற்றி இவன் நினைத்து கொள்ள முடிந்தது. அவர் வாங்கி புது சைக்கிளை எத்தனை விதமாய் அலங்கார ஜோடனைகள் பண்ணிவைத்திருந்தார் அவர்,பின் கேரியர் முன்கேரியர்; டைனமோ

படிப்பகம்

padippakam

வோடு சிகப்பு பச்சை மஞ்சள்விளக்குகள் ஆறு ஏழு. மூன்று தினுசான சப்தம் வரக்கூடிய மூன்று ஆரன்கள். சைக்கிள் மணிகள் மூன்று. போட்ட இடத்தில் 'சிக்' கென்று நிற்கும்படியாக 'பிரேக்' சிஸ்டம் ஒரு ஷோபாவில் உட்காருகிற சொகுசுடன் சைக்கிள்சீட் பளபளக்கும் நிக்கல் கம்பிகள். நிக்கல் கம்பிகளில் மணிகள்; ரிப்பன்கள் எல்லா வற்றையும் இயக்குவதற்கு வசதியாய் 'ஹாண்டில் பாரில்' பட்டன் சிஸ்டம். எப்போதும் சைக்கிளிலேயே இருக்கிற மாதிரி ஒரு சிறிய டிரான்சிஸ்டர்கூட செட்டப் செய்து வைத்திருந்தார். அப்போதே அவரின் சைக்கிளின் மதிப்பு ஒரு மோட்டார் சைக்கிளின் விலையில் பாதியாவது இருக்கும் என்று சரவணனுக்குத் தோன்றியிருந்தது. தேவையில்லை என்றாலும்கூட தேவையென்று அவர் வாங்கி வைத்திருந்த அலங்கார ஜோடனைகள் அதிகமோ அதிகம்தான். அவர் சைக்கிளில் செல்கிறபோது அடுத்தவர்கள் பார்த்து விட வேண்டுமென்று கருதி தான் இப்படியெல்லாம் செய்து வைத்திருந்தார் அவர். ஒரு சைக்கிள் மார்ட் முதலாளிகூட தனது சொந்த சைக்கிளை இத்தனை தினுசில் அலங்கார ஜோடனைகள் வைத்துக் கொள்வானா என்று நினைக்கும்படிக்கு குப்பண்ணாச்சி தனது சைக்கிளை வைத்திருந்தார்.

சைக்கிள் மார்ட் முதலாளிக்குத் தெரியாமல் சைக்கிளை கோத்த ஆட்களுக்கு ஐம்பது ரூபாய் லஞ்சமாய்க் கொடுத்து நல்ல சாமான் களாய் போடச் சொல்லி தனது புது சைக்கிளை வெகு ரம்மியமாய் அழகுப்படுத்தியிருந்தான். இப்போது கூட இவனது சைக்கிள் எல் லோரும் பார்த்து பெருமைபடும்படியான தினுசில் தான் நின்று கொண்டிருந்தது வீட்டில்.

"என்னங்க இன்னும் சைக்கிளையே நோண்டிகிட்டு... அதுக்கு ஏதுவும் ஆப்ரேஷன் பண்றீங்களா? உலகத்தில் யாரும் வாங்காத சைக்கிளை வாங்கி வைத்திருக்கிறேன் என்று.. இப்படி கொஞ்சம் வாங்க" என்று அவனது மனைவி சாந்தி பல முறை கத்தினதற்கு அப்புறம் ஒருவாறாய் மனசு வந்து சைக்கிளை விட்டுவிட்டு அவ ளருகே சென்றான் சரவணன்.

"என்ன சாந்தி சைக்கிளை துடைக்க விடமாட்டியா எதுக்கு கூப்பிட்டே?" இவன் கேட்டான்.

"எதுக்கு கூப்பிட்டேனா.. பருப்பு இல்லை புளி இல்லை சர்க்கரை இல்லை மளிகை கொஞ்சம் வாங்கிக் கொடுத்துட்டு அப்புறம் உங்கள் சைக்கிளோடு இருந்து தொலையுங்கள் ஆர் வேண்டாமென்று சொன்னது" அவள் சொன்னாள்.

படிப்பகம்

padippakam

''சரிசரி பணம் குடு வாங்கியாறேன்'' என்று சொன்னான், சைக்கிளில் போவதற்கு ஒருசந்தர்ப்பம் கிடைத்ததென்ற மகிழ்ச்சியில் மனம் துள்ளியது. அவளிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு சைக்கிளில் கடைவீதிக்குப் புறப்பட்டான்.

சாலையில் சைக்கிள் வெகுசுகமாய் போய்க் கொண்டிருந்தது. சைக்கிள் மிதிக்க மிதிக்க வெகு ஆசையாய் இருந்தது' உலகத்தில் யாருடைய சைக்கிளும் இப்படி ஓட்டத்திற்கு சுகமாக இருக்குமோ என்று நினைக்கிறபடிக்கு இருந்தது.

இவன் சைக்கிளில் போகும்போதே தெரிந்தவர்களின்' சரவணா சைக்கிள் இப்ப வாங்குனியா என்ன விலை? என்கிற மாதிரியான கேள்விகளுக்கெல்லாம் நின்று நிதானித்து வெகு உற்சாகமாய் பதில் சொல்லிவிட்டு கடைவீதிக்கு சென்றான்.

கடைவீதி காலை நேரத்திலேயே வெகுபரபரப்பாய் இருந்தது. நிறைய கூட்டம். ஒருத்தர் மேல் ஒருத்தர் இடித்துக் கொண்டு மனிதர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்... அந்த நெருக்கடியிலும் கூட ஷண நேரமாவது இவனது சைக்கிளை ஆச்சரியமாய் பார்த்த வர்கள் அதிகம். அது இவனுக்கு பெரிய சந்தோஷத்தையே ஏற் படுத்தியிருந்தது.

மளிகைக்கடை வாசலின் முன்னால் சைக்கிளை வெகு ஒய்யார மாய் நிறுத்திவிட்டு கடைக்குள் சென்றான். இவன் சென்றது ஒரு 'டிபார்ட்மெண்டல் ஸ்டோர்' ஆக இருந்ததால் கடையினுள் சென்று தான் பொருள்களை வாங்கும்படி நேர்ந்திருந்தது.

மளிகைச் சாமான்களை சொல்லி வாங்கும் போதே இவனுக்கு சாமான்களின் மீது அதிக அக்கறை ஏற்பட்டிருக்கவில்லை. வெளியே நிறுத்தியிருந்த் சைக்கிளின் மீதுதான் நோட்டம் அத்தனையும், யாரும் சைக்கிளை தொட்டுவிடுவார்களோ - பிளேடால் ஸீட்டை கிழித்துவிடுவார்களோ - சுலபமாய் கழட்டுகிற பொருளை கழற்றிக் கொண்டு போய்விடுவார்களோ என்ற கவலைகளெல்லாம் மண்டிக் கொண்டிருந்தன. நிறையமனிதர்கள் சூழும் இடங்களில் இதெல்லாம் சாதாரணம் தானே என்பதாகவும் அவனின் நினைப்பு இருந்தது.

அவசர அவசரமாகச் சாமான்களை வாங்கிக்கொண்டு வீட்டுக் குச்சென்றான். முக்கால் மைல்வரை சைக்கிளை மிதித்துச் சென்ற தால் ஏற்பட்டிருந்த் களைப்பு நீங்கவில்லை. முகமெல்லாம் வேர்த் திருந்தது.

படிப்பகம்

padippakam

சாந்தி இவன் வாங்கிவந்திருந்த சாமான்களை சரிபார்த்துக் கொண்டிருந்த போதுதான் இவன் வாங்கி வந்திருக்க வேண்டிய முக்கிய சாமான்களான பருப்பும் புளியும் இல்லாமல் இருந்ததை கவனிக்க முடிந்தது.

''என்ன ஆம்பிளை நீங்கள் புளியும் பருப்பும் வாங்காமல் வந்துட்டீங்க அது இல்லாமல் எப்படி குழம்பு வைக்கிறதாம்.. வாங்க போனது அஞ்சிசாமான் அதிலேயே ரெண்டை மறந்தாச்சு மீதிப் பணத்தை வாங்குனீங்களோ அதையும் விட்டுட்டு வந்துட்டீங்களோ? இந்தக்காலத்து சின்ன பசங்களுக்குகூட பதில் சொல்ல முடியாத காலத்தில் குழந்தை பெக்கப்போகிற ஆம்பிளைக்கு புத்திவாணாம். உங்களிடம் எப்படி நான் குடும்பம் நடத்துவது?'' என்றெல்லாம் அடுக்கடுக்காய் பேச ஆரம்பித்தவள் இதுதான் சமயமென்று அவன் மீதிருந்த எரிச்சலையெல்லாம் பேசியே தீத்துவிட்டாள்.

சரவணனுக்கு கோபம் வந்தது இப்ப என்ன குடி முழுகிப் போய்விட்டது இன்னொரு நடைச் செலவுதானே இதற்குபோய் இப்படியா கத்தி சிரிக்கடிப்பது நாலுபேர் என்ன எதுவென்று வேடிக்கை பார்க்கக்கூட செய்து விட்டார்கள்' அசிங்கம் பிடுங்கித் தின்றது இவனை.

மறுபடியும் சைக்கிளை எடுத்துக்கொண்டு கடைவீதிக்குப் புறப் பட்டான் மீண்டும் ஒரு சைக்கிள் சுகம் கிடைத்ததென்று இந்தமுறை இவனால் சந்தோஷப்பட முடியவில்லை. மனைவியின் திட்டுக்களே இவனை பெரிதாய் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இந்த முறை விட்டுப்போன சாமான்களை மறவாமல் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தபோதுதான் ''எங்கே சைக்கிள்? நடந்து வருகிறீர்களே'' என்று கேட்டாள் சாந்தி,

பெரும் அதிர்ச்சி இவன் நெஞ்சை சூழ்ந்தது. கடைவாசலில் சைக்கிளை பூட்டிவைக்காமல்கூட சாமான்கள் ஞாபகத்தில் இருந்தது உதைத்தது. எத்தனை வருஷ கனவு-எத்தனை பாடுபட்டு வாங்கின சைக்கிள்.. விட்டுபோன சாமான்களின் நினைப்பிலேயே இருந்து விட்டதால் சைக்கிளை அல்லவா மறந்து போகும்படியாயிற்று... இன்னும் சைக்கிள் அங்கே இருக்குமா? நிறைய மனிதர்கள் செல்லும் ஒரு கடைவீதியில் எப்படி இருக்கும்? .. பேரிடி தாக்கியது போலான நிலைமையில் இவன் நின்று கொண்டிருந்த போதுதான் எதிர்வீட்டு குப்பண்ணாச்சி தான் பத்து வருஷத்துக்கு முன் வாங்கின சைக்கிளை வெளியே தள்ளி வைத்துக் கொண்டிருந்தார் வெகு ஜாக்கிரதையாக.

●

படிப்பகம்

padippakam

மதுரை

அடர்த்தியாய் வந்திருள் போர்த்தியும்

வடிவம் தொலைக்காது...

வளர்ந்திருக்கும் உயரமாய் கோபுரம்,

மாற்றிய காலுடன் அவனும்;

என்னசெய்வான் இனியும்

மாற்றியகாலும் வலிக்கையில்...?

எனக்கேட்டபடி இவனும்;

கடக்கையில் மட்டுமே கவனம் கொள்கிறநானும்

மையங் கொண்டிருப்பது எந்தப்புள்ளியில்?

(க. ஜெயபாஸ்கரனுக்கு)

S. ராமநாதன்

படிப்பகம்

padippakam

எஸ். ராமநாதன்
ரவிச்சந்திரன்
கலாப்ரியா
யூமா. வாஸுகி
சிபிச்செல்வன்
பாவண்ணன்
தேவதேவன்
விஷ்வதர்ஷன்
எம். யுவன்
நிஷா
ரிஷி
இலக்குமி குமாரன்ஞானதிரவியம்
ஹெச். ஜி. ரசூல்

நிழல்

கவிதைகள்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

தாவரவியல் குறிப்பேடு

இசை பயிலும் லாவண்யத்துடன்
நீள்கின்றன கிளைகள்
பள்ளத்தாக்குகளில் வேர்கள்
சிறகுகளணிந்த விழிகளின் சோலை
அடைய வேண்டும் என உனது காதல்
கருப்பு நிறக் காற்று தொடும் ரோஜா தேகம்
பற்றி அழுகிறது மனசின் குயில்
வாழ்த்து அட்டைகளின் வடிவம்
உன்னைப் பிரதிபலிக்கத் தவறிவிட்டது
வேர்கள் வரைந்த கோட்டுருவம்
ஆதிக்க நாட்களின் கன அளவை
எடையிடுகிறது
ஒளிச்சாற்றின் கனவில் குளிக்கும்
உனது காத்திருத்தல்
இலைகள் சேகரிக்கும் தாவரவியல் மாணவியாய்

எம். ரவிச்சந்திரன்

படிப்பகம்

padippakam

உயிர்த்தெழுதல்

பிடிவாதம் பிடிக்கும்
செத்துப்போன
கணவனின் ஜாடையிலான
சின்னவளுக்கு
எவர்சில்வர் தட்டை
எடுத்துக்கொடுத்து
பெரியவனையும்
அவசரப்படுத்துவாள்
சீக்கிரம் போங்கலெ
யாராவது வநதுரப்போராக
இழவு கேக்கதுக்கு—"

வீட்டைப் பூட்டித்
தெருவில் இறங்குவாள்
திரும்பிவந்து
நெற்றியில் பொட்டுவைத்து
விட்டோமோ என்று
போட்டோக் கண்ணாடியில்
பார்த்து
வெறும் நெற்றியை
அழுந்தத்துடைத்து
மறுபடி கிளம்புவாள்

டவுண்
டீக்கடைகளுக்கு தானே
பால் எடுத்துக்கொண்டு
பதினேழாம் நாள்.

கலாப்ரியா

படிப்பகம்

padippakam

விழி மிரளும் வெளிச்சம்
செவியதிரும் பறையொலி
கண்ணாடி மரப் பொந்திலிருந்து
புகையோடெழும் புறாக்கள்
தோளமர்ந்து வீழும்.
முகமெதிரே
பலியாட்டுப் புன்னகை
தடங்காட்டிப் போகும்.
முளைத்தாடும் கரங்களிற்
கிடைத்தவைகள் நழுவ
மெல்லத் தோல் கழன்று
தசையுருகி - மூதாதைகளின்
கூன் எலும்புக் குவியளருகே
மிச்சமுள்ள தாகம் கோரும்
மேலும்
ஒரு மிடறு தண்ணீருக்கு,
பிறப்பிலிருந்து நடத்திவந்த
பலியாட்டுப் புன்னகை
பதிலெதுவும் சொல்லாமல்
இருட்டுக்குள் தொலைந்தது.

பூமா. வாஸுகி

படிப்பகம்

padippakam

நீரில் ஒரு பறவை
பறந்து போக
வானில் ஒரு மேகம்
மிதந்து போக
எட்டிப் பார்க்கும்
என் பிம்பத்தில்
காட்சிகள் ஒன்றியடங்கியது.

சிபிச்செல்வன்

படிப்பகம்

padippakam

மைக்ரோவேவ் டவரின் அபாய விளக்கு

இரும்புத் தண்டுகளின் இணைப்பில்
உயிர்பெற்று நிற்கிறது மைக்ரோவேவ் டவர்
தன் உடல்முழுக்கப்
புதிய நிறங்களைப் பூசி
பளபளக்கிறது அதன் மெருகு
உச்சியில் மட்டும்
ஒருசுடர்போல எரிகிறது அபாயவிளக்கு
வான்முழுக்க வழிகிறது அதன்வெளிச்சம்

இரவுகளில்
ஜன்னலைத் துளைத்து என்னைத் தீண்டுகிறது
தயங்கித்தயங்கி
என்னைத்தொட்டுச் சமாதானம் சொல்கிறது
அதன்மீது சுமத்தும் குற்றத்தை
அமைதியாய்ப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறது
என் வானத்தில் குறுக்கிட்டதற்காக
வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்கிறது
வானம் அதுவரை வழங்கிய உற்சாகத்தைத்
தானே தருவதாய் உறுதியளிக்கிறது
மெல்ல நெருங்கி மார்போடு
தழுவியபடியே இரவைக் கழிக்கிறது

அதன் ஒளிவிரிப்பில்
ஆனந்தம் கைகூடி வந்தபோது
இன்றிரவில்
உளவறியும் அதன் கண் திகிலூட்டுகிறது
பயம் அழியாத் தவிப்பில்
வழி அறியாது குழம்பி
மல்லாந்த நெஞ்சில் பதிகிறது
தூரத்து சுடரின் ஒருமுத்தம்.

பாவண்ணன்

படிப்பகம்

padippakam

கனவுகள்

முலை பருகிக்கொண்டிருக்கும்
சிசுவின் மூடிய இமைக்குள்
தாய் முலையாய் விரிந்த ஒரு சுவர்
பிஞ்சுக் கைவிரலாய் அதில் ஒரு பல்லி.
பல்லியை அலைககழித்து விளையாடுகிறது
முலைக்காம்புப் பூச்சி.

அலைக்கழிக்கும் பூச்சியைமறந்து ஒருகணம்
தன்னுள் ஆழ்ந்த பல்லியின் கனவில்
தாய் முலைபற்றிப் பால்பருகும் சிசு.

முலைதிறந்து நிற்கும் தாயின் கனவில்
பாற்கடலில் தவழும் குழந்தை.

அலையும் பூச்சியின் இமைக்குள்
பால்சுரக்கும் அகண்டதோர் முலையின்
ஊற்றுவாயாய்த் தான் ஆகும் கனவு

பாலூறும் ஸ்மரணையையும்
பாப்பாவின் ஸ்பரிசத்தையும்
தன் கனவில் அனுபவிக்கும் சுவர்.
'சிறந்ததோர் கனவு கண்டவர்க்குப் பரிசு'
என்ற அறிவிபபு ஒலிக்கவும்
காணாமற்போன தாயைத் தேடிப்போய்க்
காணாமற்போன என் கவிதையைக்
கனவு கண்டதால் —
எல்லாம் கனவுஆனதால் நான் விழித்தேன்,
மேலானதோர் யதார்த்தத்தின் முள்படுக்கையில்.

தேவதேவன்

படிப்பகம்

அஸ்தமிக்கும் பொழுதுபோல
வெளிவானில்
மலை மலையாய் கறுத்துக் கொண்டிருந்தது
மேகம்
பழுப்பு இலைகள்
ஓசையில்லாமல் உதிர
ஆடிக் கொண்டிருந்தது
வாகை
குளிர்ந்து கொண்டிருந்தது
காற்று
கிறங்கிப் போயின
பறவைகள்,
கனத்துக் கொண்டிருந்தது
வானம்
வந்து கொண்டிருந்தது
மழை
கலைந்து கொண்டிருந்தது
தெரு
அத்துவான வெளியில்
அசைந்து கொண்டிருந்தது
ஒரு மரம்
துளி மழைக்காய்

பேசுவதை விட
பேசாமலிரு
செய்வதை விட
செய்யாமலிரு
சும்மாயிரு
சும்மாயிருக்கும்
சுமையை தொலைக்க
சும்மா
இருக்க முடியாதுன்னால்.

விஷ்வதர்ஷன்

padippakam

இந்த உலகம்

சாசுவதம் போலும் நிமிர்ந்த
மரங்களினூடாய்
வண்ணத்துப் பூச்சிகள்
அமர்ந்து திரிகின்றன
அமைதி அழகு இவற்றுடன்
ஒரு துகள் மகரந்தம்.
என் பார்வையின் விளிம்புவரை
விரிந்த கடலின் மீதாய்
அலைகிறது காற்று
ஒரு படகையும் இழுத்துக்கொண்டு
நிலமும் நீரும் கொண்ட
சமரசத்தில் வாய்த்தது நான்
வசிக்கக் கிடைத்த தெரு, நானோ
கடவுளும் பிசாசும்
கயிறிழுக்கும் போட்டியில்
அறுபடாத கயிறானேன்.
என்னுடன் பிறந்து நான்
இல்லாது போக தானும்
அழியக் காத்
திருக்கிறது இவ்
வுலகம்

எம். யுவன்

படிப்பகம்

padippakam

அழிந்த தடயம்

நிச்சயப்படுத்துதலின்
முந்தையநாளில் நிகழ்ந்தது.
ஊஞ்சல் பலகையின் முன்
நின்றிருந்தேன்.
சில சமயம் நகரும்
பல சமயம் ஆடும்
அதன் ஆடுதற் சப்தங்கள்
ஒரு எலியின் கதறலெனக் கிறீச்சிடும்
இல்லாத ஊஞ்சலும் என்னுள் பரப்பும்
இன்னும் பல பிம்பங்கள்
இனியானது என்றபின் எதற்குமாய்
முடிதற்பொருட்டு நடத்தல் சாத்தியமாகக் கூடும்.
ஒரு கொலாஜ் முறையான விஷயங்களை
உருவாக்க வேண்டியிருக்கும்
மட்டுமல்லாமல்
காலடியில் சுற்றிச் சுற்றி வரும் சில
நாய்கள், பூனைகள் எலிகள்
தலைமீதமரும் கிளியைத் தட்டிவிட இயலாது
அச் சொற்ப கணத்தில் பரவும்
சுகம்பற்றிச் சொல்லவும்
ஜன்னல் பக்கமமரும் குயில்
சில ராகங்களிசைத்துப் போகும்
கூன் விழுந்து தடியூன்றி நகரும்
காலம்
"எதுதான் சாஸ்வதமென முணுமுணுத்தபிறகு
போய்விட்டு வந்தேன்,
நேற்றென் படுக்கையில் புரண்டவளின்
இறுதிச் சடங்கிற்கு

நிஷா

படிப்பகம்

padippakam

மொழித்துவம்

நீலம் சிகப்பு மஞ்சள்
பச்சை
கருப்பு வெளுப்பு மா பூ பலா
கண் மருந்து பால் ஈ புறா
அது இது எது எது
தினம் கணம் நிரந்தரம்
மரணம்
ஜனனம் புனரபி
ஸாம்ஸன் தலைமுடி
தகர் தூணுறு (ரு) வரு(று)ந்
தேவதரிசனம்
தண் தீச் சுடரொளிர்
தேஜோமயம் !
நிர்விசாரம் பெருகும்
விரிவெளிக்கதவருகாய்
இருகைப்புலிரோஜா சிரித்திருக்க
காற்றுக்கடிகாரம் கூறும்
நாளை படித்தாயிற்றென !
நிலவூறியினிக்கும் நா !
நதியெல்லாம் நெஞ்சுள்ளாய் !
நட்டதழிந்தோட ஓட
விட்ட இடம் விடியும் காண் !
சிறுகாற்பெருவளத்தானரட்சியில்
செக்குமாடுயுயர்த்திய சிறகெங்கும்
பட்டொளி வீசிப் பறக்கும் காட்சி
காணப் போதுமோ கண்கோடி?!

(சமர்ப்பணம் குட்டித்தோழனுக்கு)

ரிஷி

படிப்பகம்

padippakam

ராணி

அடுப்படியோரத்து சிறுவளையினின்று
அணிதிரண்டு வந்து
பாதி தேங்காய் மூடியை
மூடி மொய்த்திருந்த செருப்பெறும்புகளை
சடாரென்று எடுத்து
உச்சிவெயில் சிமெண்ட் களத்தில் கவிழ்க்க
சுருண்டு மடிந்தனவனைத்தும்
அம்மாவின் கோபம் மாதிரியே.

காணாமல் போன இலக்கு குறித்தும்
கடத்திக் கொல்லப்பட்ட வீரர்கள் குறித்தும்
ராணிக்குச் சொல்ல
மீண்டும் வளைக்குத் திரும்பின
மீண்டவை வரிசையாய்...

"அதுபற்றியென்ன
தேங்காய் மூடியோ, வெல்லக்கட்டியோ
சீனியோ, ரவையோ
ஏது வைக்கப்பட்டாலும்
இதே பலத்தோடு முற்றுகைபிடுக"

என்று சொல்லிக்கொண்டிருந்தது ராணி
வெளிப்படவியலாத
தன் அறையிலிருந்து

இலக்கும் குமாரன் ஞானதிரவியம்

படிப்பகம்

padippakam

சினிமா உலகின் மூலம் பெரும் கோடீஸ்வரராக மாறிய இளையராஜா ஏறத்தாழ 20 ஆண்டுகளில் பத்து வருடங்களாவது சினிமா உலகை தன்பிடியில் வைத்திருந்தார் என்றே கூறலாம் அவரின் காலகட்டங்களில் சிறந்து விளங்கிய எம். எஸ் விஸ்வநாதன், மற்ற இசையமைப்பாளர்கள் அனைவரும் ஓரங்கட்டப்பட்டனர் காரணம் வடமொழி பாடல்களின் கலப்பும், சாஸ்திரீய இசைகளின் மூலமும் மட்டுமே பயன்படுத்தினர். இளையராஜாவோ, நாட்டுப்புறங்களில் நிலவிய பறை,கொட்டு,கிராமியப் பாடல்களில் கூத்துகளில் நாடகங்களில் இருக்கின்ற மூலங்களை கலந்து விற்றதும் பெருவாரியான கிராமிய மக்கள் ஆதரவளித்தனர், இதுவரை சினிமா உலகினர் மட்டும்...கேட்டுவந்த பழைய இசைகளின் சாரம் புளித்துப் போகவே புதிய இசை சாரங்களை, புதிய இசையை கேட்க தயாராயிருந்தனர். அந்த சமயங்களில் இளையராஜாவின் வருகையும், அவரின் கிராமப் பாங்கான இசை வடிவங்களும் சினிமா வட்டாரங்களிலும், ரசிக சிகாமணிகளிடமும் இசையின் மீது லயிப்பை பெருமளவில் வளர்த்தது. அச்சமயங்களில் இசையின் தேக்கம் (சினிமா மட்டுமே இசைக்கு அளவுகோலாக அன்றும் இன்றும் இருக்கின்றன என்பது. மிகவும் வெட்கக்கேடான விசயம்) என்பது மாற்றுமொழி பாடல்களை கேட்க தூண்டும்வண்ணம் இருந்தன என்பது மிகையாகாது.

இளையராஜாவின் வருகையின் மூலம் மாற்றுமொழிப் பாடல்கள் துரத்தியடிக்கப்பட்டன குறிப்பாக இந்திமொழி எதிர்ப்புகள் இறந்து கொண்டிருந்த சமயம், மொழி எதிர்ப்புக்கு புத்துயிர் ஊட்டும் முயற்சியாக வடமொழி பாடல்களை விரட்டியடித்தவர் இளையராஜா என்று மொழி அறிஞர்கள் கூறுகின்றனர். அவர் விரட்டி அடித்ததன் மூலம் ஹிந்தி மொழி அடியோடு மறைந்து விட்டது என்பவை ஹிந்தியை எதிர்த்தவர், தமிழ் மொழிக்காக பாடுபட்டவர் போன்ற பிம்பங்களையே உருவாக்கவே பயன்படுகிறது, சினிமா உலகம் 80களின் துவக்கத்தில் கவிஞர்களை, இசையமைப்பாளர்களை, மற்றபிற தொழில்நுட்ப வல்லுநர்களை அவர்களின் தனித்தன்மையை முன்னிறுத்தும் துவக்கம் என்பது கவனிக்கத்தக்கது.

பொதுவாக சினிமா இந்தியாவில் மூன்று மொழிகளில் மிகவும் ஆதிக்க சக்திகளாக செயல்படுகின்றன, ஹிந்தி, தெலுங்கு, தமிழ் ஏதேனும் ஒரு மொழியில் மிகவும் பரப்பரப்பாக (பணத்தை வாரிக் கொட்டுவதில்) பேசப்படும் விசயம் மற்றமொழி படங்களுக்கு தாவி விடும் குணம் 80களில் துவங்கியது. இப்படியாக மூன்றுமொழி படங்களும் தன்னுள் இருப்பவைகளை தங்கு தடையின்றி தேச ஒற்றுமையுடன் பரிமாறிக் கொள்கின்றன. தமிழக சினிமா இன்று சமூக

படிப்பகம்

padippakam

விரோதிகள், வியாபாரிகள், கந்து வட்டிக்காரர்கள் கையில் உள்ளது. அவர்களால் முன் வைக்கப்படும் தேசம், சமூகம், குடும்பம், மனித உறவு, மொழி போன்றவைகள் பெரும்பாலும் ஒரே மாதிரியான கருத்தியலை அனைத்து தமிழக மக்களிடமும் கொண்டுபோய் சேர்த்துள்ளன. இக்கருத்தியலில் இருந்து மக்களை சரியான, உண்மையான நிலைகளுக்கு கொண்டுவர குறைந்தபட்சம் பத்து பெரியார்கள் ஒரே சமயத்தில் உருவாக வேண்டும். கடந்த இருபது வருடங்களில் மட்டும் ரசனையும் நல்ல விசயங்களும் குறித்து வெளிவந்த படங்களில் இருபது தேறினாலே பெரிய விசயம். அக்காலகட்டங்களில் சினிமா உலகில் ஒரேமாதிரியான கதையமைப்பு, வயதான நடிகர்கள் உள் அரங்கம் இவைபோன்ற காட்சிகள், படங்கள் மிகப்பெரும் தேக்க நிலையை அடைந்தன புதிய மொந்தைகள் தேவைப்பட்டன. மொந்தைகளாக திரைக்குப்பின்னால் உள்ளவர்கள் தலைதூக்கினர். அவர்களில் இளையராஜாவும் ஒருவர்.

சினிமாவின் மூலம் வாழ்க்கை குறித்த நீதிகள், கலை ரசனை உணர்வுகள், இசை குறித்து உருவாக்கப்படும் வழிமுறைகள் மிகவும் மோசடித்தனமானவை, சமூக விரோதிகள் மற்றும் அவர்களின் சக பாடிகள் காட்டும் பாதையைப் போன்றதே! கலாச்சார சீரழிவை உருவாக்கியிருக்கின்ற, சரிந்துவிழுந்த சினிமாவை தனதுமேற்கத்திய நாட்டுப்புற கலவையான இசையின் மூலம் மிகப்பெருமளவில் தூக்கி நிறுத்தினார் இளையராஜா என்பது குறிப்பிடத்தக்கது.

இளையராஜாவை தமிழர்கள் தலித் என்றும் மாபெரும் இசை ஞானி என்றும் கருதுகின்றனர். தனது இசையின் மூலம் ஏற்பட்ட புகழும் கணக்கிலடங்கா பணமும் ஒரு சிறிதளவேனும் நாட்டுப்புற இசைகளுக்கு அல்லது தாழ்த்தப்பட்டோர் நலன்களின் வளர்ச்சிக்காக ஒருபோதும் பயன்படவில்லை என்பது வேதனையான விசயமே! மாறாக வர்க்கங்களின் வழியாக காணமுடியும் ஒரு தியாகராயர் தனது இசைத்திறன்களை எவ்வாறு தன்சமூகங்களுக்கு விட்டுசென்றார் என்பதுபோல, இளையராஜா தன் சமூகங்களுக்கு என்ன விட்டு செல்ல போகிறார்? ஒன்றுமில்லை என்பதுதான். விவசாய வர்க்கங்களிலிருந்து வந்திருந்தபோதும் அதற்கான அடிப்படை கூறுகள் ஏதுமின்றி தன்னை வர்க்க மாற்றம் செய்து கொண்டார். முதலாளிய உயர்குடி/நடுத்தர வகுப்பினர் மக்களுக்கு மொழிக்குஎதிரானவர்களே என்பதை நாம் மறக்க இயலாது.

இன்று மக்களிடையே சாதாரணமாக அரசியல் குறித்தோ, வாழ்வின் அர்த்தங்கள், அல்லது போராட்டங்கள் குறித்தோ எதிர் கொள்ளும் கணங்களில் அவர்கள் சினிமா பாட்டுகளை பாடல்களில்

படிப்பகம்

padippakam

வளர்ந்ததற்கான காரணங்கள் கிடைமட்ட அமைப்பிலும், அதன் சமூக அமைப்பின் தொடர்பாலும், அத்தொடர்புக்கு காரணமான உலக மொழியாக கருதப்பட்ட லத்தீன் மொழியாலும், நில பிரபுத்துவ முறையிலிருந்து படுகைகள் அமைந்த காரணங்களாலும் இசை தாக்குண்டது'' என்கிறார். இருந்தபோதிலும் 'மறுமலர்ச்சி'' காலங்களில் மெல்லிசை பாடலுக்கு துணையாக வந்த இசை. ஒரு குறிப்பிட்ட இசையாக தேவலாயங்களுக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டு, திருமறை சாராதஇசையாக உண்மையில் பூத்துகுலுங்க ஆரம்பித்தது சமூகத்தின் வேறுபாடுகளை களைந்து, ஒருங்கிணைந்த சமுதாயம் வளர அடிகோலியது, பிற்காலத்தில் இவ்விரு இசைகளும் ஓரளவிற்கு ஒன்றன்மீது ஒன்றாக மேற்சார்ந்திருந்தாலும் இவைகளின் வளர்ச்சி ஆழமான அடையாள முத்திரையை தேவாலயங்களில் விட்டுச் சென்றது

புதிய இசைக்கருவிகளில், குறிப்பாக (Organ) 'ஆர்கான்' கருவி இசையில் புதிய சகாப்தத்தை தூண்டி வளர்த்தது. சமயசடங்கு சமய சார்புடைய ஆராதனைகள், இசை மேதைகளால் இயற்றப்பட்டது. வயலின், 'ஆர்கான் மற்றும் பியானோ இவைகளின் வளர்ச்சியுடன் Chuich Music'ஐ மறுத்து புதியஇசைவடிவங்கள் வளரத்துவங்கியது உதாரணமாக கண்டெல், மொஸார்ட். பித்தோவான் இவர்களால் உருவாக்கப்பட்ட இசை உணர்வுகளிடையே ஊடுருவிப் பாய்ந்து புதிய உத்வேகம், ஆர்வம், களிப்பு போன்றவைகளையும், (OPERA) 'ஒபரா' இசை நாடகம் மற்றும் இசைக் கருவியாளர்களின் குழு (CHOIR) இவைகளின் பங்களிப்பையும் வளர்ச்சியும் மதத்திற்கு ஒவ்வாத இசையென முத்திரை குத்தப்பட்டன. இவ்வகையான இசை வடிவங்களே பின்னர் சிம்ஃபனியாக வளரத்துவங்கின.

சிம்ஃபனி முதன்முதலில், இத்தாலியில் தோன்ற ஆரம்பித்தன, (Italian opera) இத்தாலிய ஒபாரா என்ற இசைநாடகமே மிகப் பெரும் இசையாக நிலவிவந்தது. இத்தாலிய ஒபரா என்ற நாடகத்தின் முற்பகுதியில் இசைக்கப்படும் இசைக்கு ORCHESTRIAL OVERTURE இதன் தொடர்ச்சியாகவே மற்றபிற இசைவடிவங்கள் வளர்வதற்கு தூண்டுகோலாயின. ஒபராவின் ORCHESTRIAL OVERTURE என்ற பகுதியின் விரிவாகவே 'CONCERT' மற்றும் 'CONCERTO' என்ற புகழ்பெற்ற இசைகள் உருவாகின. இவைகளில் CONCERT என்பது ஒரு குறிப்பிட்ட இசை கருவியின் தனித்தன்மையை வெளிப்படுத்துவது. வயலின், பியானோர், சாக்ஸ் என்று தனித் தனியாக CONCERT வரத்துவங்கின. CONCERTO என்பது

படிப்பகம்

padippakam

ஒருகுறிப்பிட்ட இசைகருவியின் இடையில்பாடும்(Vocal) தன்மையை கொண்டிருந்தன. இவைகளின் கூட்டு வளர்ச்சியே பின்னர் சிம்ஃபனி என்று வெளிவர துவங்கியது.

சிம்ஃபனி இளமையான, புரட்சிகரமான முதலாளிய இசை வடிவம் மதங்களிலிருந்தும், நிலப்பிரபுக்களிடம் இருந்தும் முழுமையாக மறுத்து வெளிவந்த இசைவடிவம். Symphony சிம்ஃபனி இசையை ஒரு ஒழுங்குக்குட்பட்ட அதனுள் பல்வேறான படிநிலைகளை கருத்துக்களை வெளிப்படுத்திய பெருமை இசைமேதைகளான BACH, மொஸார்ட், பீத்தோவான் இவர்களையே சாரும். Church Music அதனின் வளர்ச்சியாக CHOIR என்ற குழுக்களும் பின்னர் ORCHESTRIAL என்ற தொடர்ச்சியுமாக, அதன் உட்பிரிவுகளாக நாடகங்கள் தோன்ற காரணமாக இருந்தன. ORCHERTRIAL என்ற இசை வடிவங்களில் இருந்து Sonata, Contata என்ற நாடக இசை வடிவங்கள் முறையே வளர்ந்தது,இதில் Sonataஎன்பது சிறியநாடக இசையையும், Contata என்பது பெரியஇசையுடன்கூடிய நாடகமாக உருவெடுத்தன. இவையே பின்னர் Italian operaஎன்ற முழுமையாக இசை நாடக வடிவத்திற்கு அடிகோலியது

இன்றும் கூட சிம்ஃபனி அமைப்பவர்கள் பல concert மற்றும் sonata, opera, contata போன்ற இசைவடிவங்களை உருவாக்குகின்றனர், இசைக்கின்றனர். இவைகளுடன் string quarted இசைப்பதையும் காணலாம். சிம்ஃபனி குறித்து புகழ்பெற்ற இசைவிமர்சகர் அந்தோனி பர்டன் (ANTONY BURTON) "The story of western music' என்ற தொகுப்பில்,

"இசைக்கும், சமூகத்திற்குமிடையே மிகவும் சிக்கலான உறவு உண்டு, இசையின் வடிவம் மாறுதலும், சாஸ்திர இசை (Classica) வளர்ச்சியும் மிக நெருங்கியஉறவு சமூகத்தில் கொண்டுள்ளது. இசையமைப்பாளர்கள் தங்களது இசை எல்லோருக்கும் சென்றடைய வேண்டும் என்று மிகவும் பிரயாசைப்பட்டனர் ஏராளமான வயலின் இசைக்கருவியும் அது சார்ந்த ஒத்திசைவும் (concert) பரவலாயின. இத்தாலிய ஒபராவின் தொடர்ச்சியாக சிம்ஃபனி என்ற புதிய இசை உருவானது. இவை மிகப்பெரிய இசை அரங்குகளில் மட்டும் இசைக்கப்படும் இசையாக பரிணமித்தது. நடுத்தர வணிக வகுப்புகள் இடையே நிலவும் ஒற்றுமை; புதிய தொழில் மையங்கள். நடுத்தர வகுப்புகள், வர்த்தக நகரங்கள் இவையே குறிப்பாக ஐரோப்பிய மக்கள் பழைய17,18வது நூற்றாண்டின் கலைபாணிக்குரியஇசையை

படிப்பகம்

padippakam

ஒதுக்கிவிட்டு புதிய வகை சாஸ்திரீய Symphonyயை கேட்க ஆர்வம் காட்டினார்கள். பெரிய நகரங்களில் வளர்ச்சிபெற்ற சிம்ஃபனியை கேட்க முடிந்த அதே சமயம் சிறிய நகரங்களில் அது சம்பந்தமான இசை குறிப்பு, அற்புதமாக வடிவமைக்கப்பட்டு வந்ததது இதன் ஆரம்பமே தென்மேற்கு ஜெர்மனியில் MANNHEIN என்ற இடத்தில் Court of Eletra Paletine சபையில் அரங்கேறியது John stonetz 'ஜான் ஸ்டுனட்ஸ்'அதன் முதலாவது இயக்குநர். அவர் மிகத்திறமை வாய்ந்த இசையமைப்பாளர். அவர் காலத்தில் MANNHEIN இசைப் பள்ளி உலகத்தரம் வாய்ந்ததாக புகழ்பெற்றது. அதன் பின்னர் ஹாக்வுட் 'Hogwood' என்பவர் இதுவரையில் இசையமைத்து வந்த அனைத்து சிம்ஃபனிகளையும் தொகுத்து (Mannhein Syphonyயை) வெளியிட்டார், பின்னர் நவீன யுக உற்பத்தி முறையில் வியாபாரம் ஆக்கினார் Mannhein இசைப்பள்ளி நிதியுதவி நிரம்ப பெற்றது, அதன் காரணமாகவே மிகப்பெரும் இசைத் தொழிற்சாலை உருவாக வும் காரணமாயிருந்தன. சிம்ஃபனி இசையின் தோற்றங்களுக்கு முன்னும் பின்னும் என்ற ஒரு அளவீடு கூட 18ம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது என்று கூட கூறலாம்.

இத்தகைய இசை தேவைதானா? ஏனெனில் இதைவிட சிறந்த இசைவை முன்பு கேட்டுள்ளேன். அது எப்படி புகழ் அடைந்தது எனில் அதன் இயக்குநர் Stonetzல் தான். அவர் அதை பயிற்சி அணி வகுப்புபோல அதை நடத்தினார். பல உத்திகளை பயன்படுத்தி மிக சிறந்த தனி இசைகருவிகள் மூலம் நல்இசை வழங்கும் இயந்திரமாய் விளங்கினார். அதை அவர் Detroit போல உருவாக்கினார்.

(உலகிலேயே மிக அதிகமான கார்களை உருவாக்கும் நவீன தொழிற்சாலை Detroitல் உள்ளது) என நான் சந்தேகிக்கின்றேன். பொதுவில் Mennhein பள்ளியை ராணுவ தளபதிகளின் பள்ளி என அழைப்பதுண்டு. ஒழுங்குக்குட்பட்ட இசையை நடத்துவார்கள் இசை பவர்கள் என்று ஒரு பெரிய நிறுவனமாகவே அவ்இசைப்பள்ளி நடை பெற்றது. அச்சமயங்களில் இருந்தவர்கள் அனைவரும் BOHEMIA விலிருந்து வந்தவர்கள், இதன் வேர், இதன் பாணி தெற்குநோக்கி பரவத் தொடங்கி, அவர்கன் இசை MANNHEIN CRESCANDO'ஒரு முடிவை நோக்கி நகரத் தொடங்கியது. இதுபோன்ற கருத்தும் ஏற் கனவே Italican operaவிற்காக எழுதப்பட்டுவிட்டது. அதாவது Reaching Climax) முடிவை நோக்கி'' என்று தனது விமர்சனங்களை சிம்ஃபனி குறித்து தெரிவிக்கின்றார்.

படிப்பகம்

padippakam

இன்று ஐரோப்பிய நாடுகளின் உயர்குடி மக்கள் சிம்ஃபனியை தனது ரசிப்புத்தன்மைக்கும், அதி உயர் இசையாகவும் கருதுகின்ற நிலமைகள் மாறிவருகின்றன. ஆனால் எப்பொழுதுமே உயர்வகுப்பினர் தங்களுக்கென்ற வடிவங்களை கலைகளை வடிவமைத்துக் கொண்டுதான இருப்பார்கள் என்பதும் இயல்பானதே அதுவே பின்னர் மற்ற வகுப்பினரிடம் கொண்டு செல்லபட்டு அவையே மிக உயர்ந்த நுணுக்கங்கள் கொண்ட வடிவங்களாக முன்னிறுத்தப்படுகின்றன, அதுபோலவே உயர்வகுப்பினர் பெரும்பாலும் இன்று மற்ற மேற்கத்திய இசைவடிவங்களால் ஈர்க்கப்பட்டுவிட்டனர், சிம்ஃபனி அதன் உச்சங்களில் இருக்கும் பொழுதே பீத்தோவான் தனது 9 வது சிம்ஃபனியில் இடையில் பாடும் நிலையை உருவாக்கினார். அதைத் தொடர்ந்து பல சிம்ஃபனி இசையமைப்பாளர்கள் வெறும் கருவிகளின் இசை என்று மட்டுமில்லாமல் இடையில் Vocal தன்மையை (பாடுவது) கொண்டு வந்தனர், 'ஐஸ்லர்' சிம்ஃபனி 40 களில் இறந்துவிட்டது என்று கூறுகிறார்.

இன்று பல புதிய இசைகள் தோன்றியிருக்கின்றன. இசைக்கருவிகளின் தொழில் நுட்பங்களால் பல புதிய இசைக் கருவிகள் வெளிவரதுவங்கின. இசை பாட்டு என்ற கலவையுடன் பூதகாரமாக வரத் துவங்கின. பின்காலங்களில் ஆப்பிரிக்க நாட்டு பழங்குடிகளின் நடனத்துடன் கூடிய பாடல்கள் பெருமளவில் வெளிவரத் தொடங்கியது, சாதாரண மக்களும், அதி உயர் இசைக்களிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்ட நடுத்தர வகுப்புகளும் ஆப்பிரிக்க இசைவடிவங்களில் மோகம் கொள்ள துவங்கினர். இவைகளின் வளர்ச்சியே இன்று நிலவக்கூடிய Jaaz, Metal, Rake, Rape போன்ற இசைவடிவங்கள். இன்று நிலவக்கூடிய இசைகள் ஒரு முக்கூட்டு தன்மையை கொண்டிருக்கின்றன. இசையின் பங்கு, பாட்டுக்களின் வலிமை, அவைகளுக்கு ஏற்ற நடனம் என்று இசை இன்று ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளது. இன்று பாடல்கள், நடனம் இல்லாத இசைகளே இல்லை என்று சொல்லலாம்.

அதிஉயர் இசைபாணிகளிலிருந்து தங்களை விடுவித்துகொண்ட நடுத்தர வகுப்புகள் ஆப்பிரிக்க இசைவடிவங்களில், தற்போதைய இசைகளில் BEAT, JAZZ, RAK மோகம் கொள்ள துவங்கினர். இவைகளனைத்தும் மக்களிடம் இயல்பாக இருக்கும் இசை உணர்வுகளை சிதைத்து, தனிமனித உணர்வுகளுக்கானதாக வளர்ச்சியுற்றன தற்போதைய மேற்கத்திய இசைகள் அனைத்தும் மக்களுக்கு பயன் படாதவையே, வெறியூட்டுதல், தனிமைப் படுத்துதல், நாகரீக

படிப்பகம்

padippakam

வளர்ச்சி என்ற பொய்திரையை உருவாக்குதல் போன்றவையே. இசையின் மறுபக்கம் மக்களுக்கானதாக. அவர்களின் கற்பனைவளம் திறமை, வாழ்வின் புரிதல், சமூக சிந்தனை இவற்றை ஒருங்கிணைப் பதில் செயலூக்கம் பெறுவதற்குப் பதில் மீண்டும் சாஸ்திரீய இசை நோக்கி செல்லவே இசையமைப்பாளர்கள் முயற்சிக்கின்றனர்.

மூன்றாம் உலக நாடுகளின் கலை, இலக்கியம் இசை அரசியல் இன்று மிகவும் முக்கியத்துவம் காண துவங்கிவிட்டன காலனிய மேட்டுக்குடிகளின் இசையை மூன்றாம் உலக நாடுகளில் மீண்டும் மலரச்செய்வது. புகுத்துவது போன்றவைகள் எல்லாம் காலனிய நீட்சி என்றே கொள்ளலாம். இன்று இனி ஏராளமான ஜீபின் மேத்தாக்கள் தோன்றுவார்கள், இந்திய மேட்டுக்குடி நடுத்தர குடி கள் சிம்ஃபனியில் தன்னை திளைத்துக் கொள்ளும். ஆச்சார குடி கள் இந்திய சாஸ்திர இசைகளில் முன்னரே திளைத்துக் கொண் டிருக்கின்றனர் மெதுமெதுவாக சிம்ஃபனி அதிக உயர் இசை யின் இந்து மகா கடல் என்றெல்லாம் கூக்குரல் கேட்கப்படும்

பொதுவில் இந்திய சனாதானத்தை எதிர்ப்பவர்கள் அது எத் துறை சார்பினும் அதற்கு இணையான மேலைய உன்னதங்கள் நோக்கி செல்வது எப்பொழுதாவது நடப்பது அல்ல, மக்களுக்கு மக்களிடத்தில் செல்ல முடியாததின் விளைவே. இந்தப் பிண்ணனி யில் தான் நாம் இளையராஜவை பார்க்க முடியும், மாறாக இந்திய சனாதானத்தின் கீழ் அல்லல்பட்ட வகுப்பை சார்ந்தவர், இந்திய சாஸ்திர இசைகளை நாயின் குறைப்பு என்றவர், என்பதெல்லாம் வால்பிடிக்கும் செயல்களாகவே காணமுடியும், ஒரு குணசேகரன், ஒரு கத்தார், இன்னும் ஏராளமான குழுக்களின் இசை விற்பன்னர் கள் போல் மக்களிடம் உருவாக முடியாததின் காரணங்களை அறிந்து கொள்ள வேண்டும்

இன்று சினிமா உலகில் இருப்பவர்கள் அத்துறைக்கு வெளியே தன்னை நிலை நிறுத்திக்கொள்ளும் அவசியம் தேவைப்படுகிறது உதாரணமாக நாம் கவிஞர் கண்ணதாசனை எடுத்துக்கொள்ளலாம். சினிமாவில் பல பாடல்களின் மூலம் ஏராளமானவர்களுக்கு நன்கு அறியப்பட்ட கண்ணதாசன் இறுதி வரை 'சினிமா கவிஞர்' என்ற அடையாளத்தையே பெற முடிந்தது கவிஞர்களுக்கு கிடைத்த தனி யான மதிப்பீடுகள், அடையாளங்கள் அவருக்கு கிடைக்கவில்லை, தன் இருத்தலை சினிமாவிற்கே வெளியில் தான் முன் நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்து சமய சடங்குகளுக்கு நவீன

படிப்பகம்

padippakam

விளக்கம் கூறுதல் போன்று ... அது போலவே இன்று இளைய ராஜாவும் தன் அடையாளங்களை சினிமாவிற்கு வெளியே தேட முயற்சித்திருக்கிறார். அதுவும் கண்ணதாசனைப் போலவே, அவரும் 'ஆன்மீக பெரு வெளி' யில் உழன்றவர். சனாதான கோட்பாடு களுக்கு போராடியவர் இசைஞானியோ காலனிய அடிமைகளின் நீட்சிக்காக இசைமூலம் ப டுபடுத்றார், ஆன்மீக பெருவெளியில் திளைக்கின்றவர் இவைகளின்மூலம் ரசிக சிகாமணிகள் வேண்டுமா னால் புளங்காகிதம் அடையலாம், கல ஆய்வாளர்கள் கிறுகிறுத்துப் போகலாம்.

மாறாக ஒரு கலைஞன் தன் உன்னதம் நோக்கிய பாதையில் எவ்வித சமரசத்திற்கு இடமளிக்காதவனே தன் உன்னதம் நோக்கி செல்பவராக வரலாற்றில் நாம் காணமுடியும் இளையராஜாவோ அழுகிக் கொண்டிருக்கும் சினிமாவின் மூலம் சினிமாவிற்கு தன் இசை களை சமர்சம் செய்து கொண்டவர் மேலும் தமிழக மக்களுக்கு அவர் போதை வியாபாரியாகவே செயல்பட்டார் என்பது மறுக்கமுடியாத ஒன்று ஒரு போதை வியாபாரி தன்னை நிலைநிறுத்தி கொள்ளவே சிம்ஃபனி அமைத்தார் என்றுகூட சொல்லலாம். சிம்ஃபனி வழக்கத் தில் இறந்த இசைவடிவம் சிம்ஃபனி பல சமயங்களில் 200 பேரிலி ருந்து 300 பேர் வரை ஒரு பெரும் ஹாலில், அரங்கங்களில் நடை பெறும் ஒரு இசை தொழிற்சாலையை நினைவுபடுத்தும் மேலும் சிம்ஃபனி என்பது சிலர் கருதுவதுபோல 'கிராமப்புறங்களில் தோன் றிய மக்கள் கலைவடிவம் பிறகு இலக்கணத்திற்கு உட்பட்டு வல்லுன திற்கு உட்பட்டு தெரிவு செய்யப்பட்ட குழுவை உருவாக்கி அரச மண்டபத்திற்கு கொண்டு செல்லப்பட்டது' என்பதெல்லாம் வெறும் கற்பனைவாதம் சிம்ஃபனி தோன்றியது நகர்புறங்களில் தான் வணிக குழுக்கள், பெருவர்த்தகர்கள் புதிதாத எழுந்த உயர்குடி மக்கள் இவர்கள்தான் சிம்ஃபனிக்கான அடித்தளமாக இருந்தனர் சிம்ஃபனிக்கான அடிப்படையும் இவர்கள்தான்.

கிராமங்களுக்கும் சிம்ஃபனிக்கும் எவ்விதசம்மந்தமும் கிடையாது வேகமாக வளர்ந்த நகர்ப்புறங்களின் இருந்து தான் சிம்ஃபனி தோன்றியது

'சிம்ஃபனி'யை மேலை நாடுகள் பலமுஸ்தீபுகளுடன் வளர்க்க பெரிதும் பாடுபடுகின்றன. ஆனால் சிம்பஃனி இன்று பல பரிதாப மான சோதனைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறது பல பெரிய நகரங்களில் சிம்ஃபனி குழுக்கள் உருவாக்கப்படுதல், PROMS என்ற

படிப்பகம்

padippakam

நிறுவனம் வருடந்தோறும் இசையமைப்பாளர்களை அழைத்து சிம்ஃபனி போட்டி நடத்துவது, லண்டன் பில்ஹார்மானிக் சிம்ஃபனி இசைக்குழு ஆண்டுதோறும் புதிய இசையமைப்பாளர்களை உருவாக்குவது, அறிமுகப்படுத்துவது,போன்று பல உத்திகளை பயன்படுத்தி 'சிம்ஃபனி இசை'யை தூக்கி நிறுத்துவதற்கு அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு நமதுபண்ணைபுரத்து இசைஞானியும் முயன்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தகுந்தது தமிழனின் இசை குறித்த புரிதல்களை ஆழமர்க்குவதற்குபதில் கொஞ்ச நஞ்ச இசை ரசனையையும் இளையராஜாவின் போதை இசையில் கரைந்து காணாமல் போய்விட்டன, அவன் இதிலிருந்து மீளுவது என்பது ஒரு மிகப்பெரும் யுத்தம் நடத்துவதுபோல், விக்கிரமாதித்யன் வேதாளம் சுமப்பது போல்"...

●

படிப்பகம்

padippakam

நூல் விமர்சனம்

ஈரம்

சோ. தர்மன்

வெளியீடு :
சிந்து பதிப்பக அறக்கட்டளை
213, மகாவீர் காம்ப்ளக்ஸ்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை
இராயப்பேட்டை,
சென்னை - 600 014

இத்தொகுப்பின் கதைகளில் கருக்களனைத்தும் கிராமிய மக்களின் வாழ்வியல் களத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டவை. தர்மன் கதை சொல்லும் விதம் நேரிடையானது. பாசாங்குகளற்ற கதை மாந்தர்கள் தான் பெரும்பாலான கதைகளில் இருக்கிறார்கள். பாத்திரப் பண்புகள் மிகைப்படுத்தப்பட்ட சில இடங்களினால் தொகுப்பில் மிகப் பலவான கதைகள் பிரச்சாரத் தன்மைபெற்று கலைத்திறன்பலஹீனப்பட்டு நிற்கிறது.

இத் தொகுப்பில் தொக்கம் என்கிற சிறுகதையைக் குறிப்பிட்டு சொல்ல வேண்டும். சிறந்த சிறுகதையொன்றற்கான கூறுகளனைத்தையும் ஒன்றடக்கி, கருவும் சொல்லப்பட்ட தொனியும் புதிதாக வெளிவந்துள்ள சிறுகதை பனைமரமொன்றும் பருந்தின் கூடொன்றும் சிறுகதையின்மையமாகஉள்ளது. இவ்விரண்டையும் சுற்றிச் சுற்றி பின்னப்பட்டுள்ள பாத்திரப் பின்னல்கள் சம்பவங்களுக்கு வலுசேர்த்து சிறுகதையின் கலாப்பூர்வமான வெற்றிக்கும் காரணமாய் அமைந்து விட்டது.

தர்மனின் எழுத்துலக அக்கறை கிராமங்களின் மீதும் மனிதர்கள் மீதுமிருக்கிறது. எழுத்தின் மீதான இந்நேசிப்பும் மனிதர்கள் மீதான இவ் அக்கரையும் தர்மனிடமிருந்து நேர்த்தி மிக்க படைப்புகளை வெளிகொண்டுவரும் என நம்பலாம்.

— ஞான மாணிக்கம்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

- சம்பத் அவர்களின் மேஜிக்கல் ரியாலிசமும் கிழக்காசிய பேயின் சிரிப்பும்' கட்டுரை புதிய சிந்தனைப் போக்குகளை வளர்த்தெடுக்க வேண்டும். தற்காலசூழலில் மொழி பற்றிய ஆய்வுகள் கேள்விகளுக்கு உட்படுத்த வேண்டும். கருவி மொழி (Methlanguage) குறித்த வளர்ச்சிப் போக்குகள் தமிழுக்கு வளம் சேர்க்கும் என நம்பலாம்.

— எம். ரவிச்சந்திரன்

- சிற்றிதழ்களுக்கே உரிய முகக் களையுடன் சிறப்பாக வெளி வந்திருக்கிறது. எழுதலாம் தான். ரொம்ப நாளாச்சி எழுதி. சிற்றிதழ்களுக்கு எழுதுவது என்பது ஒரு பத்தியச் சாப்பாடு தயார் பண்ணுவது போல ; கவனமாகச் செய்ய வேண்டிய ஒன்று. பார்க்கலாம்.

— கி. ரா

- 'அன்று பறவைகள் சிறகடித்திருந்தன' சோதனை ரீதியிலான புதுமைச் சிறுகதையாக இருக்கிறது. 'மேஜிக்கல் ரியலிசம்' பாணியாக தோன்றுகிறது. படிப்பதற்கு ரசமாக இருக்கிறது. 'மேஜிக்கல் ரியலிசமும் . ' சம்பத் கருத்து ஏற்றுக் கொள்ளப் பட வேண்டியதே. மேலை நாடுகளின் மற்றும் 'மூன்றாம் உலக நாடுகளின்' மேதைகளிடம் 'தேடிப் போகையில் நாம் அடைவது தோல்வியைத் தான்'. மகத்தான கதை சொல்லும் திறனை' 'நர்மைச் சுற்றி உலவும் உண்மை' களிலும், நம்மை சுற்றி வசித்தவர்கள் - வசிக்கிறவர்களிடமும் நாம் கண்டுக் கொள்ளக்கூடும் தான்.

— வல்லிக்கண்ணன்

- நிழல் கிடைத்தது. புத்தகம் நன்றாகவே உள்ளது. சரியான திசையில் பயணம் தொடங்கியிருக்கிறது. நல்ல தடம் பதிக்க வாழ்த்துக்கள்.

— கலாப்ரியா

- ஏற்கனவே தொகுக்கப்பட்ட தொகுப்பிலிருந்து கவிதைகள் எடுத்துப் போடும் அளவுக்கு பிரேமின் எழுதுவதே நின்று விட்டதா? இந்த இரண்டு பக்கங்களை இளம் கவிஞர்கள் இரண்டு பேருக்கு நீங்கள் தந்திருக்கலாம் என்பது எனது தனிப்பட்ட அபிப்ராயம்.

— பிரம்மராஜன்

- அறிவழகன் கதை - இந்த மாந்தீரிக எதார்த்தம் இன்றும் தமிழில் சரியாக உருப்பெறவில்லை என்பதற்கு இன்னொரு சாட்சியம்.

— விக்ரமாதித்தியன்

படிப்பகம்

padippakam

30th JULY 1945

○

முப்பது வயதில் தன்னைப் பற்றி அறிந்திருத்தல் அவசியம். தன் உள்ளங்கைபோல தோல்விகளின் எண்ணிக்கையும் அவனின் தன்மைகளையும், எவ்வளவு தூரம் அவைகளை கடந்து செல்வது என்பதை அறிந்திருக்க வேண்டும். தோல்விகளை முன் கூட்டியே அறிவது - என்ன தன்மையுடன் மேலாக எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளும் மனப்போக்கு வேண்டும். ஆனால் சம்பவங்கள் எல்லாம் உண்மையானவை எல்லாவற்றையும் செய்து பார்ப்பதும், வழங்குவதும் தினசரி வாழ்வில் தீர்க்கப்படுபவை. ஆனால் முகமுடியுடன் செயல்படுவதால் ஏறத்தாழ எல்லாவற்றையும் வழங்குமளவிற்கு எனக்கு அனுபவம் கிடைத்துவிட்டது என்றாலும் திரும்பவும் பெரிய அளவுகளில் முயற்சித் தேவை ரகசியமாக முயன்று கொண்டிருக்கிறேன். இவைகளில் நம்பிக்கையுடனும் நம்பிக்கையற்றும், முனைப்புடன் முயற்சியில் எதையும் புறந்தள்ளாதே. ஏனெனில் ஒவ்வொன்றும் ஒரு வகையில் மதிப்புமிக்கவை.

○

(காம்யூ டைரி குறிப்பிலிருந்து)

படிப்பகம்